Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 202 | வியாழக்கிழமை 16 ஜூன் 2022 | ஆனி 02 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50

## வடக்கில் மழைக்கு சாத்தியம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

மத்திய வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள வளிமண்டல மேல டுக்குச் சுழற்சி காரணமாக அடுத்து வரும் சில நாள்களுக்கு வடக் கின் பல இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. 15 ▶

# இலங்கைக்கு அமெரிக்கா 120 மில். டொலர் கடனுதவி

கொழும்பு, ஜூன் 16

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காகவும் ஆதர வாகவும் 120 மில்லியன் டொலர் கடனை வழங்குவதற்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை அனுமதி வழங்கியுள்ளது. 15 ▶

## அரசியல் சூதாட்டத்தால் ‘21’ கிடப்பில்!

சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 16

ஜனாதிபதிக்கு இருக்கும் நிறை வேற்று அதிகாரத்தை இல்லாம லாக்கி அந்த அதிகாரங்களை நாடாளுமன்றத்துக்குப் பாரப்ப டுத்தும் வகையிலான 21 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைக் குக் கொண்டுவரும் 15 ▶

## அரசாங்க சேவைகள் இனிமேல் பரவலாக்கம்!

ஜனாதிபதி கோத்தாபய ஆலோசனை

கொழும்பு, ஜூன் 16

வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றுவதைப் போன்று, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் அனைத்து அரச சேவைகளையும் பரவலாக்குவது காலத்தின் தேவை என ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச தெரிவித்துள்ளார். 15 ▶

## இறக்குமதி நெருக்கடிகளால் உணவுக்குத் தட்டுப்பாடு வரும்

அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 16

அரிசி, பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் போன்றவற்றுக்கு எதிர்வரும் நாள்களில் தட்டுப்பாடு ஏற் படலாம் என்று அத்தியாவசிய உண வுப் பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. 15 ▶

## சிலிண்டர் விலை மீண்டும் உயரும்!

கொழும்பு, ஜூன் 16

சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன் றின் விலையை அதிகரிப்பது தொடர்பாகக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் 15 ▶

## பெண் தாதிக்கு கொலை மிரட்டல்!

இருவேறு விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் கடமையாற் 15 ▶

## எரிபொருள் வழங்கக் கோரி வீதியை மறித்து போராட்டம்

வவுனியாவில் நேற்று பதற்றம்



வவுனியா, ஜூன் 16

வவுனியாவில் நேற்று எரிபொருளுக்காக நீண்ட நேரம் காத்திருந்த மக்கள் பொறுமையிழந்து வீதியை மறித்துப் போராட்டம் நடத்தியதால் வவுனியாவில் பதற்ற நிலைமை ஏற்பட்டது. 15 ▶

## படகில் தப்பிச் செல்ல முயன்ற 64 பேர் திருமலை கடலில் கைது!

திருகோணமலை, ஜூன் 16

சட்டவிரோதமாக படகு மூலம் நாட்டை விட்டு வெளி யேற முயன்ற குற்றச்சாட்டில் 64 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட ரோந்து நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 50 ஆண்களும், 11 பெண்களும், 3 சிறுவர்களும் அடங்குகின்றனர். இவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் திரு கோணமலை ஆகிய இடங்களைச் 15 ▶




மாதாந்தம் சிறியதொரு தொகையை சேமித்து

ரூ. 1 மில்லியன் சேமிப்போமா?

5 வருடங்களில் ரூ. 1 மில்லியன் தொகையை சேமிக்க மாதாந்தம் ரூ. 14,100 ஐ வைப்பிலிடுங்கள்.

இப்பொழுதே செலான் வங்கியின் Seylan myplan Begin Your Ascent சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

அருகிலுள்ள செலான் வங்கி கிளைக்கு வாருங்கள் அல்லது 011 200 88 88 ஐ அழையுங்கள்

செலான் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குத் தீர்வுகாண ஆட்சிமாற்றமே அவசியம்!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 16**

**'நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.**

நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில் உள்நாட்டு. வெளிநாட்டு ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டின் தற்போதைய அரசியல். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமெனில் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம். இது மக்களின் பிரதான வேண்டுகோளாக இருக்கின்றது. ஏனெனில். இந்த அரசின் மீது மக்கள் நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்டார்கள் என்று நான் கருதுகின்றேன்.

தற்போதைய அரசால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. அது வெளிப்படையாகத் தெரிய வந்துள்ளது. நாட்டினதும் மக்களினதும் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் திடசங்கற்பத்துடன் செயற்பட்டு ஒருமித்த தீர்மானங்களை எடுத்தால்தான் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். சர்வதேச சமூகமும் இந்தக் கருமத்தில் அக்கறை காட்டும் என்று நான் நம்புகின்றேன். ஏனெனில் தற்போதைய ஆட்சியில் ஒரு மாற்றம் ஏற்பட்டால்தான் சர்வதேச சமூகத்துக்கு எமது நாட்டின் மீது ஒரு நம்பிக்கை ஏற்படும். சர்வதேச சமூகம் சகல வழிகளிலும் எமது நாட்டுக்கு உதவிகளையும் வழங்கும். அவ்விதமான ஓர் ஆட்சி மாற்றம் இல்லாமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது மிகவும் கஷ்டமான விடயம்" - என்றார். (ம-22)

## விமானியின் சாதுரியத்தால் பெரும் வான் விபத்து தவிர்ப்பு!

கொழும்பு, ஜூன் 16

மிகப்பெரிய விமான விபத்தை தவிர்ப்பதற்காக லண்டனில் இருந்து பயணித்த யு.எல்.504 விமானம் நேற்றுமுன்தினம் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறங்கியுள்ளது.

துருக்கிய வான்வெளியில் பறப்பில் இருந்தபோது பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்துடன் யு.எல்.504 விமானம் நேருக்கு நேர் மோதுவதனை தவிர்ப்பதற்காகவே இவ்வாறு விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

275 பயணிகள் மற்றும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற விமானம், ஹீத்ரோவில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் அங்கராவின் துருக்கி வான்வெளிக்குள் நுழைந்துள்ளது.

யு.எல்.504 விமானத்தின் விமானியிடம் அவர்கள் அப்போது பறந்து கொண்டிருந்த 33 ஆயிரம் அடியில் இருந்து 35 ஆயிரம் அடிக்கு பயணிக்குமாறு அங்கரா விமானக் கட்டுப்பாடு தெரிவித்துள்ளது. விழிப்புடன் இருந்த விமானி மற்றும் பணியாளர்கள், ஏற்கனவே பிரிட்டிஷ் எயார்வேஸ் விமானம் ஒன்று 15 மைல் தொலைவில் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்ததை அவதானித்துள்ளனர். இதனால், மேலே ஏற்கனவே ஒரு விமானம் பறப்பதாக அங்கராவில் உள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பிரிவினருக்கு உடனடியாக தகவல் வழங்கப்பட்டுள்ளது.

யு.எல்.504 விமானத்தின் விமானி அறிவிக்கப்பட்ட உயரத்துக்கு, பிரிட்டிஷ் எயார்வேஸ் விமானத்தை விட அதிக வேகத்தில் பறந்தால், இரண்டு விமானங்களும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகியிருக்கும். இந்த இடர்பாடே விமானியின் சாதுரியத்தால் தவிர்க்கப்பட்டுள்ளது. (ம)

*எரிபொருள் நிரப்பு நிலையங்கள்*

## பணம் செலுத்தினாலே எரிபொருள் விநியோகம்

### புதிய நடைமுறை அறிமுகம்

கொழும்பு, ஜூன் 16

முன்பதிவுகளுக்கு அமைய, கொடுப்பனவு பணமாக செலுத்தப்பட்ட பின்னர் எரிபொருள் விநியோகிக்கும் திட்டம் நேற்றுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என அகில இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் இணைச்செயலாளர் சாந்த சில்வா தெரிவித்ததாவது:

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள காசோலை வசதி உடனடியாக நிறுத்தப்பட்டு பணம் செலுத்தப்பட்ட பின்னர் எரிபொருளை விநியோகிக்கும் முறைமையே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய எரிபொருள் கிடைக்கப்பெற்றதன் பின்னர், காசோலை மூலம் ஒரே தடவையில் இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்துக்கு பணத்தை செலுத்தும் முறைமை கைவிடப்பட்டுள்ளதுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கிடைப்பது மேலும் வரையறைக்கு உள்ளாகும்.

இதேவேளை விலைச் சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்வதற்கான கணிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனால் 2 வாரங்களுக்கோ அல்லது மாதத்துக்கு ஒரு முறையோ எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளக்கூடிய நிலை உள்ளது. எனினும் விலைச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்தி எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்வது இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரண தெரிவித்துள்ளார்.

எந்தெந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது என பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பொதுமக்கள் அவசியமற்ற முறையில் வரிசைகளில் காத்திருப்பதில் அர்த்தமில்லை - என்றார். (ச-இ)



## நடேசலிங்கம் குடும்பத்தை சந்தித்தார் ஆஸி. பிரதமர்

கொழும்பு, ஜூன் 16

இலங்கை தமிழ் புகலிடக்கோரிக்கையாளர் குடும்பத்தை அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் நேற்று சந்தித்தார்.

குயின்ஸ்லாந்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் அங்கு வசித்துவரும் நடேசலிங்கம் குடும்பத்தினை சந்தித்துள்ளார். நடேசலிங்கம் குடும்பத்தினர் தம்மை அவுஸ்திரேலியாவில் வாழ அனுமதித்தமைக்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்தனர். அவர்களுக்கு நிரந்தர வதிவிடம் விரைவில் கிடைக்கும் என பிரதமர் உறுதியளித்தார். (ம)

## அரச மருத்துவர் சங்க புதிய தலைவர் தெரிவு

கொழும்பு, ஜூன் 16

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் புதிய தலைவராக விசேட மருத்துவர் தர்ஷன சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் அவர் போட்டியின்றித் தெரிவாகியுள்ளார் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வாசன் இரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் மருத்துவர் தர்ஷன சிறிசேன விசேட மருத்துவர்களுக்கான இடமாற்ற சபையின் தலைவராகச் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# எரிபொருள் இல்லாவிட்டால் பேருந்துச் சேவை இல்லை!

## வெள்ளியுடன் முடங்கும் அபாயம் கெமுனு விஜேரத்ன எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி தொடருமானால், எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் அனைத்துத் தனியார் பேருந்துகளும் சேவையில் இருந்து விலக நேரிடலாம் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

எதிர்வரும் புதன் (நேற்று) வியாழக்கிழமைகளில் (இன்று) கையிலுள்ள எரிபொருள் இருப்பை வைத்து 20 வீதமான (4 ஆயிரம் பேருந்துகள்) தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடும். எரிபொருள்கள் கிடைக்காத பட்சத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் எண்ணிக்கை 3 ஆயிரமாக மட்டுப்படுத்தப்படும். இதேநிலை தொடர்ந்தால் வெள்ளிக்கிழமை பேருந்துச் சேவைகளை முன்னெடுக்க முடியாத நிலைக்கு தனியார் பேருந்து உரிமையாளர்கள் தள்ளப்படுவார்கள்.

எதிர்வரும் வாரங்கள் மிகவும் முக்கியமானவை. எரிபொருள் நெருக்கடி தொடருமானால், இந்த அரசாங்கம் மே 9 ஆம் திகதியை விட அதிக வன்முறை விளைவுகளை சந்திக்க நேரிடும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுப்பல்லக்கு தம்பி கால் நடை

## கட்டுப்பாட்டுக்குள் வராத அரிசியின் நிர்ணய விலை

**யாழ்ப்பாணம், ஜூன் 16**

**யாழ்ப்பாணத்திலுள்ள பெரிய, சிறிய வர்த்தக நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட அதிக விலையில் அரிசி விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் அத்தியாவசிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன் விலைகளும் உயர்ந்துள்ளன. இவ்வாறே கடந்த சில நாள்களாக அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவியதுடன் அரிசியின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்றது. இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி அரிசியை விற்பனை செய்யும் விலை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது.

எனினும் அதனைப் பொருட்படுத்தாத பெரிய, சிறிய வர்த்தக நிலையங்கள் தாம் நினைத்த விலைகளில் அரிசியை விற்பனை செய்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளை அவதானித்த பாவனையாளர் அதிகார சபையினர் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பிரபல வர்த்தக நிலையங்களுக்குச் சென்று திடீர் சோதனைகளை முன்னெடுத்தனர்.

சோதனைகளின் போது கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசியை விற்பனை செய்த வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றங்களிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலையில் விற்பனை செய்தால் ஒரு லட்சம் ரூபா தொடக்கம் 5 லட்சம் ரூபா வரை தண்டப்பணமும் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் யாழ். மாவட்டத்தில் பல பிரதேசங்களில் உள்ள பெரிய, சிறிய வர்த்தக நிலையங்களில் இன்னமும் கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசியை விற்பனை செய்வதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே குறித்த பிரதேசங்களிலும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-14)

---

*சரசாலையில்*

## குளத்து நீரில் சிறுபோக விளைச்சல் அமோகம்

சாவகச்சேரி, ஜூன் 16

சரசாலையில் குளத்து நீரில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையின் விளைச்சல் பெருமளவில் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த நாக குலேந்திரன் என்பவர் சரசாலை வடக்கு நுணாவில் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள தனது ஒரு ஹெக்ரெயர் வயல் காணியில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டார். இதன் அறுவடை நேற்றுமுன்தினம் பிரதேச கமநல சேவைகள் நிலையத்தினர் முன்னிலையில் இடம்பெற்றது.

சேதனப் பசளையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை காலபோக நெற்செய்கைக்கு ஈடாக பெரும் விளைச்சல் கண்டுள்ளது. இத்தகைய அமோக விளைச்சல் எவ்வாறு கிடைத்தது என்று குறித்த நபரிடம் கேட்டபோது விதைப்பின்போது தேவையான மழைத்தண்ணீர் வயலில் காணப்பட்டதாகவும் அதன்பின்னர் தண்ணீர்மட்டம் குறைவடையும் வேளையில் குளத்திலிருந்து தேவையான தண்ணீர் பாய்ச்சியதாகவும் தெரிவித்தார். (ஒ-14,9)

---

## அரிசி மோசடியாளர்களை உடன் சுற்றிவளையுங்கள்

*மஹிந்த அமரவீர தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 16



அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்கள் மற்றும் பதுக்குவோருக்கு எதிராக உடன் சுற்றிவளைப்புகளை துரிதப்படுத்துமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தொழிலற்றோர் சங்கத்தினருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த சுற்றிவளைப்புக்களைத் துரிதப்படுத்துவதற்கு அதிகாரிகளுக்கு பற்றாக்குறை நிலவுமாயின், பாதுகாப்புத் தரப்பினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்.

இதேவேளை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இளையோரை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அகில இலங்கை தொழிலற்றோர் சங்கத்தினர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர். (ச-இ)

---

# விவசாய குடும்பங்களுக்கு இலவசமாக யூரியா உரம்

*விவசாய அமைச்சு தீர்மானம்*

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் குறைந்த வருமானம் பெறுகின்ற விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக யூரியா உரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு எதிர்வரும் பெரும்போகத்துக்காக 3 லட்சத்து 65 ஆயிரம் யூரியா பசளை மூடைகளை ஒரு விவசாயக் குடும்பத்துக்கு தலா ஒரு யூரியா மூடை வீதம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறைந்த வருமானம் பெறும் 14ஆயிரம் குடும்பங்களுக்கு பாசிப்பயறு செய்கைக்கு 18 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்க உலக சுகாதார மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

---




**'ஐயோ, கள்ளர் களவெடுத்துக்கொண்டு ஓடுறாங்கள்' எண்டு ஆரும் கத்தினால் என்ன செய்வியள்? உடனே ஓடிப்போய் கள்ளரைப் பிடிச்சு பொலிஸிட்ட குடுப்பியளோ? இல்லாட்டி கள்ளரைக் கண்டுபிடிச்சுக் கத்தினவரைப் பொலிஸில பிடிச்சுக் குடுப்பியளோ? பொதுவா எல்லாரும் கள்ளரைத்தான் பிடிச்சுக் குடுப்பினம். ஆனால் கிளிநொச்சியில ஒரு பெரிய பள்ளிக் கூடத்தில நடந்த களவைக் கண்டுபிடிச்சவருக்கு எதிரா பொலிஸில முறைப்பாடு செய்யப் போகினமாம். அந்தப் பள்ளிக்கூடத்தில நடந்த சில மோசடியள் எண்டு சில விசயங்களை, ஒரு ஊடகவியலாளர் தன்ர பேஸ்புக்கில போட்டிருந்தார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பாவிச்சு எடுத்த சில ஆதாரங்களையும் தான் சொல்லுற விசயங்களோட சேர்த்திருந்தார். அதுகளை வைச்சுப் பாக்கேக்க அவர் சொல்லுறது உண்மைபோல தான் கிடக்குது. இப்பிடி பேஸ்புக்கில பள்ளிகூட விசயம் வந்த உடன, அந்தப் பள்ளிகூட அபிவிருத்திச் சபை நேற்று அவசரமாக் கூடியிருக்கு. கூடினவை என்ன செய்திருக்கோணும்? இந்த விசயம் உண்மையா, இல்லையா? எண்டு அந்த ஊடகவியலாளர் போட்ட ஆதாரங்களை வைச்சு, ஆராய்ஞ்சு அதுக்கேத்தபடி நடவடிக்கை எடுத்திருக்கோணும். ஆனால், 'அதெப்பிடி பள்ளிக்கூடப் பேரை அவர் நாறடிக்கலாம்? முதலில ஆளுக்கு எதிரா பொலிஸில முறைப்பாடு செய்யோணும்' எண்டு கொதிச்சிருக்கினம். இவ்வளவு பிள்ளையள் படிக்கிற ஒரு பள்ளிக் கூடத்தில ஊழல் நடந்திருக்கெண்டு, ஒருத்தன் ஆதாரத்தோட சொன்னால், அதில சம்பந்தப்பட்ட ஆக்களுக்கு எதிரா முறைப்பாடு செய்யாமல், அந்த ஊழலைக் கண்டுபிடிச்சவருக்கு எதிரா முறைப்பாடு குடுக்கிறதெல்லாம் என்ன மாதிரி டிசைனோ தெரியேலை. அதெல்லாம் சரி, ஒரு ஊழலைக் கண்டுபிடிச்சால் ஏன் ஒட்டுமொத்த அபிவிருத்திச் சபையும் குழம்புகினம்? மடியில கனமிருந்தால் தானே வழியில பயமிருக்கும்??**

+++

**'இனிமேல் உங்களுக்கு கிட்ட உள்ள செற்றில எவ்வளவு பெற்றோல் இருக்கு? எப்ப புது பவுஸர் வந்து சேரும்? எப்ப பெற்றோல் குடுப்பினம்? எண்ட தகவலையெல்லாம் ஒரு அப்ஸில மக்கள் அறிஞ்சு கொள்ளலாம்' எண்டு அரசாங்கம் அறிவிச்சதும், சனத்துக்கு கடும் புளுகம். 'அப்பாடா, இனிமேல் லைனில கண்டபடி நிக்கத் தேவையில்லை' எண்டு அந்த 'அப்ஸை' எல்லாரும் போனில டவுண்லோட்டும் பண்ணிட்டினம். ஆனால் அந்த 'அப்ஸில' எங்கெயெல்லாம் பெற்றோல் அடிபடுகுது எண்டு காட்டுதோ, அங்க ஓடிப்போனால் செற் பூட்டுப்பட்டுக் கிடக்குது. பிறகு விசாரிச்சால், 'கொழும்பில இந்த செற்றுக்கு பெற்றோல் பவுஸரில லோட் பண்ணினதைத் தான் இப்பிடி போடுகினம். அந்த பெற்றோல் பவுஸர் வந்துசேர ஒருநாளாகும். அதால இண்டைக்கு இங்க பெற்றோல் அடிபடுகுது எண்டு காட்டினால், அடுத்தநாள் தான் கிடைக்கும்' எண்டு செற்காரர் பாடமெடுக்கினம்.**

**அதைவிடப் பகிடி என்னெண்டால், 'கிட்ட உள்ள எந்த செற்றில பெற்றோல் இருக்கு?' எண்டு அந்த 'அப்ஸில' மன்னாரில உள்ளவை தேடினால், தமிழகத்தில உள்ள பெற்றோல் செற் எல்லாம் அதில காட்டுது. அப்ப இனிமேல், கடலுக்கால பைக்கை எடுத்துக் கொண்டு சனங்கள் இந்தியாவுக்குத்தான் போய் பெற்றோல் அடிக்கோணுமெண்டதை அந்த அப்ஸ் சொல்லாமல் சொல்லுதோ? இதென்னடா, அப்ஸுக்கு வந்த சோதினை!!**



\- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மே 9 வன்முறைக்கு காரணமானோரை உடனடியாகக் கண்டறியுங்கள்!

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 16**

**இலங்கையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல்களை வெளிப்படுத்தியோர் தொடர்பான தகவல்கள் கண்டறியப்படவேண்டும். இந்தக் கலவரங்கள் வன்முறைகளுக்கு அவர்களைப் பொறுப்புக்கூறச் செய்ய வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது அமர்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது அமர்வு தற்போது நடைபெற்று வருகின்றது. இந்த அமர்விலேயே பிரிட்டன் தலைமையிலான சில நாடுகள் இலங்கை அரசாங்கத்திடம் மேற்படி வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் அந்த நாடுகள் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை கடந்த சில மாதங்களாகக் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டுள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இதனால் இலங்கை மக்களுக்குக் கடும் துன்பம் ஏற்பட்டுள்ளது.

அமைதியான முறையில் ஒன்று கூடுதல் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கான தங்களது உரிமையை ஆர்ப்பாட்டக்காரர்கள் சமீபகாலங்களில் பயன்படுத்தியுள்ளனர். அதை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம். அதேநேரம், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான வன்முறைத் தாக்குதல் குறித்தும் அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் ஆதரவாளர்கள் மீதான வன்முறைகள் குறித்தும் நாங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்.

இந்த வன்முறைகளுக்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு, அவர்களை பொறுப்புக்கூறச் செய்ய வேண்டும். இலங்கையில், சிவில் சமூகத்தினர் கண்காணிக்கப்படுவது அச்சுறுத்தப்படுவது தொடர்பான எங்கள் கரிசனைகள் தொடர்கின்றன. சிவில் சமூகம் செயற்படுவதற்கான சூழலை பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளன. (ம)



# ராஜபக்சக்களிடம் இருந்து டலஸ் விலகியமை சிறப்பு

## மெச்சுகிறார் சம்பிக்க

**கொழும்பு, ஜூன் 16**

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்டோர் அரசாங்கத்திலிருந்து விலகி, ராஜபக்ச குடும்பத்தின் ஆதிக்கம் அற்ற பயணத்தை ஆரம்பித்துள்ளமையானது அரசியலிலும் ஜனநாயகத்திலும் தென்பட்டுள்ள சிறந்த அறிகுறியாகும். நாட்டுக்கு புதிய அரசியல் சக்தியொன்றின் தேவை உணரப்பட்டுள்ளது. அதற்கு நாமும் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்கு புதிய அரசியல் சக்தியொன்றின் தேவை உணரப்பட்டுள்ளது. அதற்கு நாமும் தயார், நாடும் தயார். குறிப்பாக நாட்டின் இளம் தலைமுறையினர் அதற்குத் தயாராகவுள்ளனர். அதற்கு உதவ வேண்டுமல்லவா? கட்சிகளுடன் இணைந்து அன்றி பொதுக் கொள்கையின் அடிப்படையில் வேலைத்திட்டங்களின் ஊடாக வங்குரோத்தடைந்துள்ள இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். அதற்குத் தொழிற் சங்க ரீதியிலான தலையீட்டை நாடு கோரியுள்ளது. அதேபோன்று இளைஞர்களும் தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தைக் கோரியுள்ளனர். இதனை ஏற்படுத்த நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். நாடாளுமன்றத்திலுள்ள 225 பேரும் திருடர்கள் என்று நாம் நம்பவில்லை. நாடாளுமன்றத்தில் ஆளும், எதிர்க்கட்சிகள் என சகல தரப்பிலும் முக்கியத்துவமுடைய அரசியல்வாதிகள் உள்ளனர். அவர்களுடன், வெளியிருப்பவர்களையும் நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்காக இணைக்க வேண்டியுள்ளது.

ராஜபக்ச குடும்பவாதத்திலிருந்து விலகி சுதந்திரமாக சிந்திக்கும் தரப்பினர் அந்தக் கட்சிக்குள்ளிருந்து உருவாகுவதானது அரசியலிலும் ஜனநாயகத்திலும் தென்பட்டுள்ள சிறந்த அறிகுறியாகும்.

அது ஆளுங்கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும் குடும்பமொன்றின் ஆதிக்கம் இன்றி உருவாகுவது சிறந்ததாகும். தற்போதுள்ளது சர்வகட்சி அரசாங்கமும் அல்ல, இடைக்கால அரசாங்கமும் அல்ல. பழைய அதிகாரிகளே உள்ளனர். அவ்வாறன்றி தொழிற்றுறை நிபுணர்களுக்கு வாய்ப்பளித்து நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும். எதிர்காலத்தில் இதனை விட பெரும் நெருக்கடிகளை நாடு எதிர்கொள்ளும் -என்றார். (ம)

## ஓரிரு வாரங்களுக்குள்

# நாணய நிதிய உதவிகளுடன் உணவுப் பாதுகாப்புத் திட்டம்!

## ரணில் வியூகம்

**கொழும்பு, ஜூன் 16**

இந்த மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும் இலங்கையில் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை உடனடியாகச் செயற்படுத்தவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு முகங்கொடுத்திருக்கும் பிரச்சினைகளில் இருந்து நாட்டை மீட்டெடுத்து மக்களுக்குச் சிறந்த தொரு வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். அந்த வேலைத்திட்டத்தில் ஆரம்ப நடவடிக்கையாக இருப்பது எரிபொருள், எரிவாயு, மின்சாரம், மருந்து பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்பட்டிருக்கும் வரிசைகளை இல்லாமலாக்கி இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியம் உட்பட உலகில் ஏனைய நிறுவனங்கள் மற்றும் நாடுகளுடன் மிகவும் நெருக்கான தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு, நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் இருந்து மீட்பதற்கு தொடர்ந்து முயற்சித்து வருகிறார். நாங்கள் அனைவரும் எந்த வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ளாமல், வேலைத்திட்டங்களை வெற்றியடையச் செய்வதற்காக ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம். அத்துடன் இந்த மாத இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் மட்டத்திலான இணக்கப்பாட்டுக்கு வருமுடியுமாக இருக்கும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும் இலங்கையில் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றை உடனடியாகச் செயற்படுத்தவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார். அந்த வேலைத்திட்டம் வெற்றியடையும் வரை மக்கள் பொறுமையுடன் செயற்படவேண்டும் -என்றார். (ம)

# மருத்துவர் ஷாபிக்கு சந்திரிகா பாராட்டு!

**கொழும்பு, ஜூன் 16**

குருநாகல் மருத்துவமனையின் மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் பிரிவின் விசேட மருத்துவர் ஷாபி ஷிகாப்தீன், தான் பணி இடை நிறுத்தப்பட்டிருந்த காலத்துக்காக தனக்கு வழங்கப்பட்ட வேதனத்தை அத்தியாவசிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கியுள்ளமைக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராட்டுத் தெரிவித்தார்.

'பொய், மோசடி மற்றும் வெறுப்புணர்வை போர்த்திக்கொண்ட சிங்கள தீவிரவாதத்தின் வெட்கக்கேடான அத்தியாயம் சிறந்த தொழில்சார் நிபுணரின் வாழ்வை சிதைத்துவிட்டது. உங்கள் மீது உமிழப்பட்ட வெறுப்புக்கு, நீங்கள் வழங்கிய பதிலுக்காக மருத்துவர் ஷாபி அவர்களே உங்களுக்குப் பாராட்டுக்கள். சிந்திக்கும் திறன் உடைய அனைத்து சிங்கள பிரஜைகளும் உங்களை வணங்குகின்றார்கள்' -என்று சந்திரிகா தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (ம)

# சேதனப் பயிர்ச்செய்கை தொடர்பில் ஆலோசனை வழங்கியோர் ஒளிவு!

## வேலைவாய்ப்பற்றோர் சங்கம் காட்டம்

**கொழும்பு, ஜூன் 16**

சேதனப் பசளை சம்பந்தப்பட்ட பயிர்ச் செய்கை தொடர்பாக ஆலோசனை வழங்கிய அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் மருத்துவர் பாதெனிய போன்ற நபர்களே தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு பொறுப்புக்கூறவேண்டும். தற்போது அவர்கள் ஓடியொளிந்துள்ளனர் என வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் சிக்கல்கள் தொடர்பாக பேச்சு நடத்தவும், பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்கவும் குறித்த சங்கத்தின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் விவசாய அமைச்சுக்குச் சென்று அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் பேச்சு நடத்தினர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அந்தச் சங்கத்தின் தலைவர் சுமித் பிரியசாந்த இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தொழில் வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தினால், தொழில் வாய்ப்புக்களைப் பெற முடியாதவர்கள் கமத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால், தற்போது, நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையால் கமத்தொழிலையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகின்றனர்

## கடத்தல்காரர்களே தகவலாளிகள் என்கின்றன பாதுகாப்பு வட்டாரங்கள்

**கொழும்பு, ஜூன் 16**

**நாட்டைவிட்டு சட்டவிரோதமாக வெளியேறும் இடப்பெயர்வாளர்கள் பற்றிய தகவல்களைக் கடத்தல்காரர்களே பாதுகாப்புப் படையினருக்கு வழங்கு கின்றனர் என்ற தகவல் தெரியவந்துள்ளது.**

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக கடல்மார்க்கமாக நாட்டைவிட்டு சட்டவிரோதமாக வெளியேறுவோர் எண்ணிக்கை அதிகமாக பதிவாகி வருகின்றன. இந்த வருடத்தில் இதுவரை படகு மூலம் அவுஸ்திரேலியாவை அடைய முயன்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 250 பேர் வரையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தநிலையில் வேறு நாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி அவர்களிடம் லட்சக்கணக்கில் பணம் பறித்துவிட்டு படகுக்குள் ஏறியதும் கடத்தல்காரர்களே படையினருக்கு இடப்பெயர்வாளர்கள் குறித்த தகவல்களை வழங்குகின்றனர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# போர்டினாண்டோ தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானம்!

## 'கோப்' குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

கோப் குழுவில் சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்து பின்னர் அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக அறிவித்த, இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் எம்.சீ.சீ.போர்டினாண்டோ தொடர்பாக கோப் குழு அடுத்தவாரம் தீர்மானம் எடுக்கும் என கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் ஷரித்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் எம்.சி.சி.போர்டினாண்டோ கடந்தவாரம் கோப் குழுவில், ஜனாதிபதி தொடர்பில் தெரிவித்திருந்த சர்ச்சைக்குரிய கருத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மின்சார சபையின் செயலாற்றுகை தொடர்பாக அறிவதற்காக அதன் அதிகாரிகள் கோப் குழுவுக்கு கடந்த வாரம் அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போது மின்சார சபையின் தலைவர் எம்.சி.சி. போர்டினாண்டோ, இந்தியப் பிரதமர் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு தெரிவித்திருக்கும் அறிவிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்த விடயங்கள் ஊடகங்களில் பிரசுரமாகிய பின்னர் ஜனாதிபதி அதனை நிராகரித்திருந்தார். அதன் பின்னர் எம். சி.சி.போர்டினாண்டோவும் தான் தெரிவித்திருந்த கருத்தை திரும்பப் பெற்றுக்கொள்வதாக தெரிவித்திருந்தார். அதுதொடர்பில் அனுப்பியிருந்த கடிதம் நேற்று எனக்கு கிடைத்தது. எனவே அவர் தொடர்பில் அடுத்தவாரம் கோப் குழு கூடி தீர்மானம் எடுக்கும் என்றார்.

மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள காற்றாலை மின் திட்டத்தை அதானி நிறுவனத்துக்கு கையளிக்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அழுத்தம் வழங்கினார் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தன்னிடம் கூறினார் என்ற சர்ச்சைக்குரிய கருத்தையே எம்.சி.சி.போர்டினாண்டோ கோப்குழுவில் தெரிவித்து பின்னர் திரும்பப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# எரிபொருள் வேண்டும் மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 16

எரிபொருள் வழங்குமாறு கோரி தெஹிவளையில் மக்கள் பிரதான வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதனால் கொழும்பு - காலி வீதியின் இரு மருங்கிலும் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்ட நிலையில் அலுவலகங்கள் மற்றும் பிற தேவைகளுக்குச் செல்வோர் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாடு முழுவதும் தற்போது எரிபொருள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக வெடித்துள்ள நிலையில் தெஹிவளையில் மட்டுமன்றி, கொழும்பில் பல இடங்களிலும் எரிபொருள் வழங்குமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ச-இ)

# புதிய போக்குவரத்து திட்டம் நேற்றுமுதல் நடைமுறை

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 16

எரிபொருள் நெருக்கடியால் பொருளாதார மற்றும் நாளாந்த நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய போக்குவரத்துத் திட்டம் நேற்றுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் 'சிசுசரிய' என்ற மாணவர்களுக்கான பஸ் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.இதன் கீழ் புதிதாக மேலும் இருபது பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. ஒரு மாதத்துக்குள் இந்த பஸ்களின் எண்ணிக்கை 50 வரை அதிகரிக்கப்படும். அத்துடன் 'பார்க் அன்ட் ரைவ்' என்ற போக்குவரத்து சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாக்கும்புர, கடவத்த, கட்டுப்பெத்த, கொழும்பு கோட்டை ஆகிய இடங்களுக்கு இந்தச் சேவை மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இதேவேளை தற்சமயம் ஆகக்கூடுதலானோர் ரயில் போக்குவரத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இதனால் இந்தப் புதிய திட்டத்தின் கீழ் ஆகக்கூடுதலான ரயில்களை சேவையில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

கொழும்பில் இருந்து கண்டிக்கான சொகுசு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்கிஸையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை இவ்வார இறுதியில் ஒழுங்கு செய்யப்பட இருக்கின்றது - என்றார். (ச-இ)

# வெள்ளி விடுமுறை எமக்கு வேண்டாம்

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 16

நீதித்துறை மற்றும் நீதித்துறை ஆணைக்குழுவின் கடமைகள் வெள்ளிக்கிழமைகளில் வழமைபோன்று இடம்பெறுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் மற்றும் அதன் செயலாளர் இசுரு பாலபடபெந்தி ஆகியோர் கடிதம் மூலம் நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற நடவடிக்கைகள் அத்தியாவசிய சேவைகளின் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

நீதித்துறை சேவை அத்தியாவசியமான சேவைக்கு உட்பட்டதுடன் வெள்ளிக்கிழமைகளில் சேவை நிறுத்தப்படும் பட்சத்தில் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச -இ)



*மின்தடைப்பட்டதால்*

# எரிபொருள் பெற மக்கள் பல மணிநேரம் காத்திருப்பு

வவுனியா, ஜூன் 16

வவுனியா, ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று எரிபொருள் இருந்தும் மின்சாரம் தடைப்பட்டதால் மக்கள் பல மணிநேரம் காத்திருந்தனர்.

வவுனியாவில் நேற்று பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாத்திரம் பெற்றோல் [illegible] இதனால் [illegible] ருள் நிலையத்தில் பெற்றோலைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். எனினும் நேற்றுக்காலை 8.30 மணிக்கு மின்சாரம் தடைப்பட்டதால் எரிபொருள் நிரப்புவதற்கு தாமதம் ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் பல மணிநேரம் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். பின்னர் முற்பகல் 11 மணிக்கு மின்சாரம் வந்ததும் மீண்டும் எரிபொருள் நிரப்புஞ் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. (ஒ-14,110)

# மருந்துத் தட்டுப்பாடு 6 வாரங்களில் தீர்வு

## சுகாதார அமைச்சர் நம்பிக்கை



கொழும்பு, ஜூன் 16

நாடளாவிய ரீதியில் மருத்துவமனைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை எதிர்வரும் 6 வாரங்களுக்குள் முழுமையாக நிவர்த்திக்கலாம் என சுகாதார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்ததாவது:-

மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி கிடைத்துள்ளது. அத்தியாவசியமான 14 மருந்து வகைகள் தற்போது தேவையானளவு கையிருப்பிலுள்ளன.

186 மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அவற்றை விரைவில் கொள்வனவு செய்வதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கடத்தலில் ஈடுபட்ட லொறி புத்தளத்தில் சரிந்து விபத்து

## சந்தேகநபர் கைது

புத்தளம், ஜூன் 16

புத்தளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் தேக்கு மரக்குற்றிகளை கடத்திய லொறி சரிந்து விபத்துக்குள்ளாகியது.

குறித்த லொறியில் சட்டவிரோதமாக தேக்கு மரக்குற்றிகள் கடத்தப்படுகின்றன என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து பொலிஸார் அந்த லொறியை மறித்துச் சோதனையிட முயன்றபோது லொறியின் சாரதி, லொறியை நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளார். இதையடுத்து பொலிஸார் லொறியைத் துரத்திச் சென்றபோதே அது கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது. லொறியின் சாரதி கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# தனியார் மருத்துவமனைகளை நாடும் அரச மருத்துவமனைகள்

கொழும்பு, ஜூன் 16

**அரச மருத்துவமனைகளும் தற்போது தனியார் மருந்தகங்களில் இருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் சங்கப் பொருளாளர் மஞ்சுள ஜயவர்த்தன தெரிவித்ததாவது:-

பல அத்தியாவசிய மருந்துகளுக்குத் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மருத்துவமனையில் அவசர விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்படுபவருக்கு சாதாரண சேலைனை வழங்குவதற்குத் தனியார் மருந்தகங்களை நாட வேண்டியுள்ளது.

நகர மற்றும் கிராமம் என்ற பாகுபாடின்றி அனைத்து மருத்துவமனைகளிலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. பெருமளவான கிராமப்புற மருத்துவமனைகளில் சாதாரண சேலைன்களின் கையிருப்புகள் முடிவடைந்துள்ளன- என்றார். (ச-இ)

## கடன் மறுசீரமைப்பு:

# ஆலோசகப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஜூன் 16

வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்துதல் மற்றும் மறுசீரமைப்பது தொடர்பான ஆலோசனைகளை நாட்டுக்கு வழங்க இலங்கையால் நியமிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

நிதி மற்றும் சட்ட ஆலோசனை நிறுவனங்களான 'லசாா்ட்' மற்றும் 'கிளிபோர்ட் சான்ஸ்' ஆகியவற்றின் பிரதிநிதிகளே வருகை தந்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல்கள் மற்றும் அவற்றின் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு இந்த நிறுவனங்கள் இலங்கையால் நியமிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இந்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## நுவரெலியாவில்

# சிறுமியொருவர் சடலமாக மீட்பு



கொழும்பு, ஜூன் 16

நுவரெலியா - கந்தப்பளை ஹைபொரஸ்ட் தனிவீட்டு குடியிருப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தரம் மூன்றில் கல்வி கற்கும் இராஜமாணிக்கம் விசாந்தினி என்ற சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சேலையால் கழுத்து இறுக்கப்பட்ட நிலையிலேயே மேற்படி சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



## நுவரெலியாவில்

# இரண்டு மாதங்களின் பின்னர் லாப்ஸ் எரிவாயு விநியோகம்

கொழும்பு, ஜூன் 16

நுவரெலியாவில் லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் நீண்ட நாள்களின் பின் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் நுவரெலியாவில் இரு மாதங்களுக்கு மேலாக லாப்ஸ் எரிவாயு விநியோகிக்கப்படவில்லை. இந்த நிலையில் இருமாதங்களின் பின் நேற்று லாப்ஸ் எரிவாயு விநியோக மொத்த விற்பனை முகவர்களால் கொண்டுவரப்பட்ட ஆயிரத்து 150 எரிவாயு சிலிண்டர்கள் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. (ச-இ)

# புதிய வரிச் சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஜூன் 16

2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் சமூகப் பாதுகாப்பு நிதியம் ஒன்றை அறிமுகப்படுத்த சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி ஆண்டொன்றுக்கான மொத்த விற்பனைப் புரள்வு 120 மில்லியன்களாக அண்மிக்கும். இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு 2.5 சதவீதத்தின் கீழ் புதிய வரியாக சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டவரைவுக்கு சட்டமா அதிபர் ஒப்புதல் கிடைத்துள்ளது.

இந்தச் சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

# சொத்துக்காக மாமியாரை கொலைசெய்த மருமகன்

## வத்தளையில் கொடூரம்

கொழும்பு, ஜூன் 16

வத்தளை மஹாபாகே, கல்உடுப்பிட்ட பிரதேசத்தில் சொத்துக்காக மாமியாரை மருமகன் கொன்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று மஹாபாகே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி மஹாபாகே, கல்உடுப்பிட்ட பிரதேசத்தில் உள்ள வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் பொருள்களைத் திருடி குறித்த பெண்ணைக் கொன்றுவிட்டுத் தப்பிச்சென்றனர் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

எனினும் உயிரிழந்த பெண்ணின் மருமகனின் நடவடிக்கைகளில் பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்துக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போதே சொத்துக்களை சொந்தமாக்குவதற்கு மாமியாரைக் கொலைசெய்ததை சந்தேக நபர் ஏற்றுக்கொண்டு வாக்கு மூலம் அளித்துள்ளார்.

இதனையடுத்து வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 40 கோடி ரூபாவுக்கான நிலையான வைப்புச் சான்றிதழ், காணி உறுதிப்பத்திரங்கள், உயிரிழந்த பெண்ணின் தங்க நகைகள், பணம் உள்ளிட்ட ஆவணங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர். (ம-14,இ)



# STR Cool ரெனிஸ் போட்டிகள்: யாழ். மாவட்ட வீரர்கள் வெற்றி!

இலங்கை ரென்னிஸ் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட 10 வயதுக்குட்பட்ட ஒற்றையர் பிரிவு STR Cool ரென்னிஸ் போட்டிகளில் யாழ். மாவட்ட வீரர்கள் கலந்துகொண்டு பல்வேறு வெற்றிகளைப் பதிவுசெய்துள்ளனர்.

8 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஜெ.நர்ஸ்வின் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

7 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ரா.ஆரோன் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

7 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான ஒற்றையர் போட்டியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி வி.அஸ்விதா இரண்டாம் இடத்தைப் பெற்றார். (ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எதிர்காலமே இருண்மையில் !

இலங்கையில் உள்ள சிறுவர்கள் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது யுனிசெப் அமைப்பு. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பாரதூரமான பொருளாதார நலிவு நிலையால், சிறுவர்களிடம் தற்போது ஏற்பட்டுள்ள போசணைக் குறைபாடு அடுத்து வரும் நாள்களில் இன்னுமின்னும் அதிகரிக்கும் என்றும், குறிப்பாக கிராமப்புறங்களில் இந்த அவலநிலை கோரத் தாண்டவமாடும் என்றும் தனது எச்சரிக்கையைத் தீவிரப் படுத்தியிருக்கின்றது யுனிசெப்.

இலங்கையிலுள்ள சிறுவர்கள் போசணைக் குறைபாட்டால் பாதிக்கப்படப் போகின்றார்கள் என்ற எச்சரிக்கை விடுக் கப்படுவது இதுவொன்றும் முதல் முறையல்ல. எதிர்க்கட்சி களும், இங்குள்ள தொண்டு நிறுவனங்களும் இந்த அபாய ஒலியை மாறிமாறி எழுப்பிக்கொண்டிருந்தாலும், சர்வ தேசத்தில் சிறுவர்களின் நலன்களை முன்னிறுத்திச் செயற் படும் அமைப்பொன்று விடுத்துள்ள எச்சரிக்கை நிச்சயம் கதிகலங்க வைக்கக்கூடியதே.

யேமன், சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் உள்ள சிறுவர் கள் மட்டில் இவ்வாறான கரிசனையை இதுவரையும் முன் வைத்த யுனிசெப் இப்போது முதல்முறையாக இலங்கைச் சிறுவர்களின் மந்த போசாக்கு பற்றியும் இருண்மையான எதிர்காலம் பற்றியும் எச்சரித்துள்ளமையை அவ்வளவு இலகுவாக எடுத்துக்கொள்ளமுடியாது. இது மிகத் தீவிர மான பிரச்சினை. நேர்படச் சொல்வதாயின், நாட்டில் தற் போது ஏற்பட்டிருக்கும் எரிபொருள் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை, உரப்பற்றாக்குறை, மின்தடை என்பவற்றை யெல்லாம் விட அதிதீவிரமான பிரச்சினை இதுதான். அந்த வகையில், போர்க்கால அடிப்படையில் விரைந்து தீர்வுதேட வேண்டிய விடயமும் இதற்குத்தான். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். இன்றைய சிறுவர்கள் போசணையற்ற வர்களாக மாறினால், பின்னர் அவர்கள் ஒரு வீரியமான தலைமுறையாக, உழைக்கும் ஆற்றலுள்ளவர்களாக உரு வெடுக்க முடியாது. மாறாக அடுத்த தலைமுறை நோயாளிச் சமூகமாக மாறும் அபாயமே அதிகம்.

வறிய மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் தமது அடுத்தவேளை உணவு தொடர்பான தெளிதலற்ற நிலைக்குள் தள்ளப்பட்டி ருக்கும் இந்தக் காலகட்டத்தில், சிறுவர்களிடம் ஏற்படலாம் என்று சொல்லப்படும் மந்த போசணைப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையே.

இதற்காக, நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளை யும் மையப்படுத்தியதாக, போஷாக்குத் திட்டமொன்று மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டியது தற்போது காலத்தேவையானது. இந்தத் திட்டங்கள் ஏலவே இங்கு நடைமுறையில் இருந்தாலும் தனியாரின் தலையீடுகளால் பல்லாயிரம் குறைபாடுகளுடனும் தடங்கல்களுடனும் தான் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன - நடைமுறைப் படுத்தப்படுகின்றன.ஏற்கனவே பாடசாலைகளில் மாண வர்களுக்கு மதிய உணவளிக்கும் திட்டமும் தத்தளித்துக் கொண்டிருக்கும் இப்போதைய நிலையில், போசாக்கான இளையோரை உருவாக்குவதில் பெரும் சவால் காத்திருக் கவே செய்கின்றது.

மந்த போசணைப் பிரச்சினைக்கு நிகராக மாணவர் இடை விலகலும் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமையை புள்ளிவிவரங்கள் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளன. இந்த மாணவர் இடைவிலகலைத் தற்போது தடுத்து நிறுத்தக்கூடிய பொறிமுறையும் 'உணவூட்டலே'. சிறுவர் களே எதிர்காலத்தின் முதுகெலும்பு. அந்த எதிர்காலத்தை நலினப்படுத்திவிடாதீர்கள். என்ன விலை கொடுத்தேனும் மாணவ சமூகத்தை அறிவிலும் ஆரோக்கியத்திலும் பலப் படுத்துங்கள். அதைவிட அவசியமான பணி வேறொன்றும் இங்கில்லை. மந்த போசணையற்ற சமூகத்தை உருவாக்குதல் தனியே அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல. ஒவ்வொரு பெற்றோரின் கையிலும் அது தங்கியுள்ளது. போசாக்கான உணவு வகைகளை எதிர்காலத்தில் சந்தைகளில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றக்கூடும். எனவே வீடுகள் தோறும் சத்துள்ள சிறுதானியங்களைப் பயிரிட்டு, சத்தான உணவு வகைகளை ஆக்குவதொன்றும் அவ்வளவு கடினமான காரியமல்ல. ஆனால், அதை செய்யத் தாமதம் காட்டு வதுதான் ஆபத்தானது. நன்றே செய்வோம், அதை இன்றே செய்வோம் என்பது வீட்டுத் தோட்டங்களுக்கும் போசணையான சமூகத்தை உருவாக்குவதற்கும் பொருத்தமே.

### நாளொரு நல்வார்த்தை

"வாழ்க்கையில் வெற்றி அடைய வேண்டுமானால் கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்"
- நெப்போலியன்




மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில்

# பொறுப்புக்கூறினால் பொருளாதாரம் மீளும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 16**

**அரசமைப்பின் மூலமான பாதுகாப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதே பொருளாதார மீட்சியை முன்னிறுத்திய கட்ட மைப்பு ரீதியான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அடிப்படை களாகும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.**

தற்போது நாடு பெரும் பொரு ளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு முகங்கொ டுத்திருக்கும் நிலையில், இந்தப் பின்னடைவுகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக் களை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் மேற் கொண்டுள்ள பதிவிலேயே மனித உரிமைகள் கண்கா ணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

"நாடு முகங்கொடுத்திருக் கும் பொருளாதார நெருக்க டிக்குத் தீர்வுகாணும் அதே வேளை, சமூகத்திலுள்ள பின்தங்கிய பிரிவினரைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக் கைகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளி வுபடுத்தியிருக்கின்றார். இருப்பினும் அரசமைப்பின் மூலமான பாதுகாப்பை உறுதிப்படுத்தல், மனித உரிமை மீறல்கள் தொடர்பி லான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் ஆகிய வையே கட்டமைப்பு ரீதி யான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அடிப் படைத் திறவுகோலாகும்" - என்றுள்ளது. (ம)

## சீனாவின் மானிய அரிசி 25ஆம் திகதி வந்தடையும்

கொழும்பு. ஜூன் 16

சீன அரசாங்கம் மானியமாக இலங் கைக்கு 500 மில்லியன் யுவான் பெறுமதி யுடைய அரிசியை 6 கட்டங்களாக வழங்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்ததாவது:-

முதற்கட்ட அரிசித் தொகை எதிர்வரும் 25 ஆம் திகதியும் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதியும் கொழும்பு துறைமு கத்தை வந்தடையவுள்ளன.

குறித்த அரிசித் தொகையில் 10ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி பாடசாலை மாண வர்களின் மதிய உணவுத் திட்டத்துக்கு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் ஏற் படப் போகும் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள இந்த அரிசித் தொகையை வழங்க சீனா முன்வந்துள் ளது - என்றுள்ளது. (ச-இ)

**நாளை** 17.06.2022 வெள்ளிக்கிழமை ஆனி 03

சுபநேரம் : 05.53 - 07.23
ராகுகாலம்: 10.23 –11.53
சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 66 வீதமான இலங்கையர்கள் உணவைச் சுருக்கியுள்ளனர்

## உலக உணவுத்திட்டம் ஆய்வில் கண்டறிவு

**கொழும்பு, ஜூன் 16**

**இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள உணவுப்பஞ்சத்தில் சிக்குண்டு 66 வீதமானோர் தினசரி உணவு எண்ணிக்கையை குறைத்துள்ளனர் என உலக உணவுத் திட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.**

உலக உணவுத்திட்டம் கடந்த ஏப்ரல் மாதம் ஒரு கூட்டு விரைவான உணவுப் பாதுகாப்பு மதிப்பீடு ஒன்றை நடத்தியது. இதில் 17 மாவட்டங்களிலுள்ள பொருளாதாரம் நலிந்த குடும்பங்களை ஆய்வுக்குட்படுத்தி வெளியிட்ட ஆய்வறிக்கையில்,

66 சதவீதம் பேர் தினசரி உண்ணும் உணவின் எண்ணிக்கையை குறைத்துள்ளனர்.

அத்துடன் 86 சதவீதமானோர் மலிவான உணவுகளையும் 95 சதவீதமானோர் குறைவான சத்துள்ள உணவுகளையும் வாங்குவது தெரியவந்துள்ளது.

இலங்கையில் உணவுப் பணவீக்கம் 57 சதவீதமாக உள்ளது. வெளிநாட்டுகையிருப்புக் குறைவு, சாதகமற்ற மாற்று வீதங்கள் மற்றும் குறைந்த உள்நாட்டு உணவு உற்பத்தி ஆகியவற்றால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக மக்கள் தங்கள் அன்றாட உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போராடி வருகின்றனர்- என்றுள்ளது. (ச-இ)

# இலங்கையில் சிறுவர்களுக்கு மந்தபோசணைக் குறைபாடு!

## யுனிசெப் அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் சிறுவர்களைப் பொறுத்தமட்டில் மந்தபோசணைக் குறைபாடானது மிகமுக்கிய அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. தற்போது அவர்களுக்குரிய உடனடி உதவிகள் வழங்கப்படாதபட்சத்தில், பின்தங்கிய நிலையிலுள்ள சிறுவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள் என்று யுனிசெப் அமைப்பு எச்சரித்திருக்கின்றது.

இது தொடர்பில் யுனிசெப் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை பல தசாப்த காலத்தின் பின்னர் இப்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. அரிசி, பால்மா, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்வடைந்து செல்கின்றன.

இவற்றின் காரணமாக சிறுவர்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எமது அமைப்பின் மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கையில் 2.3 மில்லியன் சிறுவர்கள், அதாவது இரண்டுக்கு ஒன்று என்ற விகிதத்திலான சிறுவர்கள் போசணை, சுகாதாரம், தூயகுடிதண்ணீர், கல்வி, உளவளசேவை உள்ளிட்ட ஏதேனுமொரு வகையிலான அவசர உதவி தேவைப்படும் நிலையில் உள்ளனர். எனவே இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், சிறுவர்கள் மீதான மோசமான பின்விளைவுகளுடன் இந்த நிலைவரம் மேலும் மோசமடையும்.

இலங்கையில், சிறுவர்களைப் பொறுத்தமட்டில் மந்தபோசணையானது முக்கிய அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. பெருமளவான சிறுவர்கள் பசியுடனேயே உறங்கச்செல்கின்றார்கள். இது ஏற்கனவே தெற்காசியாவில் 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் மந்தபோசணையுடையோரின் எண்ணிக்கையை உயர்வாகக் கொண்டிருந்த நாடாகக் காணப்பட்ட இலங்கை மேலும் பாதிப்படைவதற்கு வழிவகுக்கும். சுமார் 4.8 மில்லியன் சிறுவர்களின் கல்வி சமநிலையில் காணப்படுகின்றது. தற்போதைய சூழ்நிலையில் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுவோர் வசிக்கும் பகுதிகளில் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களின் வீதம் குறிப்பிடத்தக்களவால் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கைக்கு உடனடி உதவிகள் வழங்கப்படாத பட்சத்தில், பின்தங்கிய நிலையிலுள்ள சிறுவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள்- என்றுள்ளது. (ம)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸால் உயரதிகாரிக்கு 31 லட்சம் ஊதியம்

## கோப் குழு கண்டறிவு

கொழும்பு, ஜூன் 16

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ள நிலையிலும் உயர்மட்ட முகாமைத்துவ அதிகாரி ஒருவருக்கு 31 லட்சம் ரூபா சம்பளம் வழங்குகிறது எனப் பொது முயற்சியாண்மைக்கான தெரிவுக்குழுவான கோப் குழுவின் புதிய அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

2021ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நிகர இழப்பு 45 ஆயிரத்து 674 மில்லியன் ரூபாவாகவுள்ளது.

2020ஆம் ஆண்டில் திறைசேரி ஊடாக கூடுதல் மூலதனத்தை ஒதுக்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளபோது குறித்த நிறுவனம் உரிய வகையில் நிதி முகாமைத்துவம் செய்திருப்பின் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருக்காது.

இந்த நிலையில் நஷ்டத்தில் இயங்கும் ஒரு தேசிய விமான நிறுவனம் உயர்மட்ட முகாமைத்துவ அதிகாரி ஒருவருக்கு 31 லட்சம் ரூபா சம்பளம் வழங்குகின்றமை ஏற்புடையதல்ல.

இந்தக் கொடுப்பனவுக்கான நிதி, அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் பொது நிதிகள் ஊடாக வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கோப் குழு அவதானம் செலுத்தியுள்ளது- என்றுள்ளது. (ச-இ)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உக்ரைனின் முதுகில் குத்தியதா பிரான்ஸ்?

*பல்லாயிரம் கோடி பெறுமதியான எரிபொருள் ரஷ்யாவிடம் இறக்குமதி*

மொஸ்கோ, ஜூன் 16

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் மீது பல நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துத் துள்ள நிலையில், பிரான்ஸ் பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான எரிபொருளை ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்தமை தெரியவந்துள்ளது.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் முயற்சிகளை மேற்கொண்டதை அடுத்து உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கையை அறிவித்து சுமார் நான்கு மாதங்களாக அங்கு தீவிரத் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியமும், ஐ.நாவும், அமெரிக்காவும் கடும் கண்டனத்தைத் தெரிவித்ததுடன் பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன. அத்துடன் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதில்லை என்று கொள்கையளவிலும் முடிவெடுத்தன. இந்த நிலையில், இந்த முடிவுகளைமீறி பிரான்ஸ் ரஷ்யாவிடம் இருந்து அதிகளவான எரிபொருளை வாங்கிக் குவித்தமை தெரியவந்துள்ளது.

ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் இலங்கை மதிப்பில் சுமார் 30 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான அளவுக்கு எரிபொருள்களை பிரான்ஸ் வாங்கிக் குவித்துள்ளது.

இத்தனைக்கும் ரஷ்யாவுக்கு எதிரான போருக்காகப் பிரான்ஸ் உக்ரைனுக்கு சில ஆயுத உதவிகளை வழங்கியதுடன் போர் நிறுத்த நடவடிக்கைகளுக்கு மத்தியஸ்தம் வகித்தமையும் குறிப்பி டத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகியதை அடுத்து, அந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பில் பிரான்ஸ் தற்போதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




எமது ஸ்திரத்தன்மையுடன் உங்கள் முதலீடுகளுக்கு அதிக வருவாய்

நிலையான வைப்பு வட்டி வீதங்கள்

| காலம் | 03 மாதங்கள் | 06 மாதங்கள் | 01 வருடம் | 05 வருடங்கள் |
|---|---|---|---|---|
| வட்டி வீதம் | 13.50% (14.20% [illegible]) | 14.50% (15.03% [illegible]) | 15.00% ([illegible]) | 18.50% ([illegible]) |

உங்கள் நிலையான வைப்பு தொகையில் 90% வரை முற்பணமாக பெற்றுக் கொள்ளலாம்

COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது | Fitch Rating AA- (lka) | +94 112 353 353 | www.combank.lk

உங்கள் நலனே எங்கள் நோக்கம்


## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த வேலை இன்று நிறைவேறும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும். கேட்ட இடத்தில் இருந்து உதவி கிடைக்கும். தடைப்பட்டிருந்த வேலை முடியும்.

**இடபம்:** எதிர்பாராத பிரச்சினைகள் தோன்றும். மனதில் தேவையற்ற சங்கடம் உண்டாகும். புதிய முயற்சிகள் இன்று கைகொடுக்காமல் போகும். உங்கள் திறமைக்கு சவாலான நாள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு உங்கள் செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரத்தில் ரகசியம் புலப்படும். லாபத்துக்குரிய வழியைக் காண்பீர்கள்.

**கடகம்:** பணம் தொடர்பாக ஏற்பட்ட தடை விலகும். அரசு வழியிலான நன்மை உண்டாகும். பணியிடத்தில் உங்கள் செயல்களுக்கு வரவேற்பு உண்டாகும். எதிர்பாராத வரவு வரும்.

**சிம்மம்:** தொழிலில் எதிர்பார்த்த லாபம் ஏற்படும். புதிய தொடர்புகளால் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப நிலையை உயர்த்த முயற்சிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

**கன்னி:** தாய்வழி உறவுகளால் லாபம் அடைவீர்கள். பெரியவர்கள் சந்திப்பால் நன்மை ஏற்படும். சுபச் செய்தி [illegible] வரும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணியிடத்தில் வெற்றி உண்டாகும்.

**துலாம்:** குடும்பத்தினர் நலனில் அக்கறை கொள்வீர்கள். உங்கள் உயர்ந்த எண்ணம் இன்று நிறைவேறும். வியாபாரத்தை விருத்தி செய்வீர்கள். நிதி நிலையை உயர்த்துவீர்கள். எதிர்பார்த்தவை நிறைவேறும்.

**விருச்சிகம்:** உங்களை விட்டு விலகிச் சென்ற உறவினர்கள் மீண்டும் உங்களைத் தேடி வருவார்கள். கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட பிரச்சினை மறையும். மகிழ்ச்சியான நாள். தடைபட்டிருந்த செயல் முடிவுக்கு வரும்.

**தனுசு:** உங்கள் பிரச்சினையை மற்றவர்களிடம் கொண்டு செல்ல வேண்டாம். கடவுள் அருளால் நன்மை உண்டாகும். உங்களைச் சீண்டிப் பார்க்க சிலர் முயற்சிப்பார்கள். அமைதியை இழக்காதீர்கள்.

**மகரம்:** செலவுகளால் உங்கள் இருப்பு கரையும். பரபரப்பான நாள். உங்கள் வரவைவிட செலவு அதிகரிக்கும். கடன் கொடுத்தவர் நெருக்கடியை ஏற்படுத்துவர். விழிப்புணர்வு தேவை. பணவரவு உண்டு.

**கும்பம்:** இன்று மற்றவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். லாபகரமான நாள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வார்கள். தொல்லைகள் விலகும்.

**மீனம்:** வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறையால் லாபம் அதிகரிக்கும். மகிழ்ச்சியான நாள். உங்களுடைய நீண்டநாள் எண்ணம் ஒன்று நண்பர்களால் இன்று நிறைவேறும். சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்துக் கற்கைகளை வளமூட்டிய மேலைத்தேசத்து அறிஞர் வில்சன்



பிரதீபா சிவபாலன்,
இந்துநாகரிகத் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

கீழைத்தேசவியல் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு கீழைத்தேசவியல் சிந்தனைகளை மேலைநாடுகளுக்குக் கொண்டு சேர்த்தவர்களில் வில்சன் குறிப்பிடத்தக்கவர். பிரித்தானியரான இவர் 26ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் 1786இல் லண்டன் மாநகரில் பிறந்தார். இளமைப் பராயத்திலிருந்தே உலோகவியல் மற்றும் நாணய வார்ப்புத் தொழில் நுணுக்கங்களை அறிவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். 1804இல் மருத்துவக் கற்கைக்குத் தெரிவான வில்சன் சென். தோமஸ் போதனா மருத்துவமனையில் இக்கற்கை நெறியைத் தொடர்ந்தார்.

1808இல் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியில் இணைந்து உதவி மருத்துவ அறுவைச் சிகிச்சை நிபுணராக இந்தியாவுக்குச் சென்றார். இக்கால கட்டத்தில் வில்சனுக்கு கோல்புறூக்கின் தொடர்பு ஏற்பட்டது. கோல்புறூக் இந்துக் கற்கைகள் புலத்தில் மேற்கொண்டிருந்த ஆய்வுகள் வில்சனை வடமொழியைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியதுடன் மட்டுமல்லாது வில்சனின் ஆர்வத்தையும், திறமையையும் கண்டு கோல்புறூக் அவரை மேலும் உற்சாகப்படுத்தினார். 'மொழிகளின் தந்தை' எனப்பட்ட சமஸ்கிருதத்தை குறுகிய காலத்தில் கற்றுக் கொண்டார். வில்சன் இந்திய மக்களுக்கு ஆங்கில மொழி மூலமான பாடபோதனையை மேற்கொள்ளக்கூடாது என்ற நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக நின்றார். அது, மனிதர்களினுடைய சமய பண்பாட்டுணர்வை மழுங்கடிக்கச் செய்து இந்திய உடலையும், ஆங்கிலேய மனதையும் கொண்ட மனிதர்களாக இந்தியர்களை மாற்றிவிடும் என்பதனை ஆங்கில ஆட்சியாளர்களுக்கு உரத்து உபதேசித்தார்.

## வில்சனுக்கு அறிவூட்டிய காசி

பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் இந்திய நிர்வாகத்தால் 1819இல் வில்சன் காசிக்கு அனுப்பப்பட்டார். சமஸ்கிருதக் கல்விக்கும், இந்துசமய நடைமுறைகளுக்கும் மிகவும் சிறப்பு வாய்ந்த இடமாகிய காசி இவரின் வசிப்பிடமாயிற்று. காசியிலிருந்த வடமொழிக் கல்லூரியொன்றை புனரமைத்த வில்சன் காசியிலிருந்த ஆளுமையில் சிறந்த வடமொழிப் பண்டிதர்களோடு நெருக்கமான நட்புறவைப் பூண்டிருந்தார். காசியில் தங்கியிருந்த காலப்பகுதியிலேயே 'இந்து நாடக அரங்கம்' என்ற தனது புகழ்பெற்ற நூலுக்குரிய தரவுகளைச் சேகரித்தார். 1832ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் அவரை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வடமொழிக்கான போடன் பேராசிரியராகத் தெரிவு செய்தது.

## வில்சனின் படைப்புக்கள்

வில்சன் அவர்களது ஆக்க முயற்சிகளாக 1813ஆம் ஆண்டிலே காளிதாசரின் உணர்ச்சி பொங்கும் காவியமான மேகதூதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்துக்களின் மதப்பிரிவுகள் என்ற அவருடைய புகழ்பெற்ற நூற்றொகுதியின் பல்வேறு இடங்களில் இந்துசமயத்தின் பல்லினத் தன்மையையும், பல்வகை நம்பிக்கைகளையும் பற்றி ஆழமாக நோக்கப் பெற்றார்.

வில்சன் இந்தியாவின் பண்டைய மொழி மற்றும் இலக்கியங்களில் மிகுந்த ஆர்வம் காட்டினார். வில்சனின் ஆயுட்காலச் சாதனையாகக் கருதத்தக்கது இருக்கு வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை ஆகும். 1850இல் ஆரம்பித்த வெளியீட்டுப்பணி 1860இல் வில்சன் இறக்கும் வரையில் அரைவாசிக் கட்டத்தையே தாண்டியிருந்தது. இருக்கு வேத மொழிபெயர்ப்பு ஆறு பெரும் தொகுதிகளாக வெளிவந்தது. வேதவிற்பன்னரான சாயனரின் உரைவிளக்கத்தை அடிப்படையாகக் கொண்டே வில்சன் மொழிபெயர்ப்பை மேற்கொண்டிருந்தார்.

வைத்தியரான வில்சன் இந்துக்களின் ஆயுள்வேதப் பனுவல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சிகிச்சை முறைகள் தொடர்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். வில்சன் கொள்ளை நோய், வெண்குஷ்டம் ஆகியவற்றுக்கான ஆயுள்வேத சிகிச்சை முறைகளின் ஆய்வுகளில் ஈடுபட்டார்.

மகாபுராணங்களினதும், கதாசரித்திர சாகரம் என்னும் நூலினதும் சுருக்க உரைகளும் வில்சனால் எழுதப்பட்டன. புராணங்கள் உள்ளடங்கல்கள் மற்றும் இயல்பு பற்றிய குறிப்பு என்ற நூல் வில்சனின் மரணத்தின் பின் 1897இல் வெளிவந்தது. புராணங்களின் தொன்மையும் சமயவியலும், புராணங்களின் எண்ணிக்கை, புராணங்களின் சாரம், உப புராணங்கள், விஷ்ணு புராணம் பற்றிய குறிப்பு என ஐந்து இயல்களில் இந்துக்களின் பௌராணிக மரபு பற்றிய ஆழமான தரிசனத்தை இந்நூல் வெளிக் கொணர்ந்துள்ளது. விஷ்ணு புராணமானது வில்சன் பௌராணிக மரபில் ஆய்வினை மேற்கொண்ட புராணமாகக் காணப்படுகின்றது. இது ஆங்கில மொழி பெயர்ப்பாகக் காணப்பட்ட போதிலும் ஐந்து தொகுதிகளாக 1840ஆம் ஆண்டில் இந்நூல் வெளிவந்தது.

> வில்சன் அவர்களது ஆக்க முயற்சிகளாக 1813 ஆம் ஆண்டிலே காளிதாசரின் உணர்ச்சி பொங்கும் காவியமான மேகதூதத்தினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்துக்களின் மதப்பிரிவுகள் என்ற அவருடைய புகழ் பெற்ற நூற்றொகுதியின் பல்வேறு இடங்களில் இந்துசமயத்தின் பல்லினத் தன்மையையும், பல்வகை நம்பிக்கைகளையும் பற்றி ஆழமாக நோக்கப் பெற்றார்.

## மக்கன்சி ஆவணத்திரட்டில் முன்னின்று உழைத்தவர்!

மக்கன்சி ஆவணத்திரட்டு எனும் செயற்பாட்டில் வில்சன் மிகவும் பிரதான பதவியை வகித்தார். கேணல் கொலின் மக்கன்சியால் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட இந்தியச் சுவடிகள், கலைப்பொருள்கள், தொல்பொருள் சின்னங்களே மக்கன்சி ஆவணத்திரட்டு என அழைக்கப்படுகின்றது. இத்தகைய சேகரிப்புப் பொருள்கள் தொடர்பிலான விரிவான விவரணக் குறிப்புக்கள் அடங்கிய நீண்ட பட்டியலொன்றும் 1828ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதற்கு வில்சன் இணை ஆசிரியராக பணியாற்றினார். இந்த ஆவணம் எட்டு மிகப்பெரிய தொகுதிகளாக வெளிவந்தது. இவற்றில் 528க்கும் மேற்பட்ட சுவடிகள் வில்சனால் சேகரிக்கப்பட்டன. வேதங்கள், வேதாந்தம், நியாயம், மீமாம்சை, சாங்கியம், தந்திரங்கள், தர்மசாஸ்திரங்கள், புராணங்கள், மருத்துவம், வானசாஸ்திரம் ஆகியவை தொடர்பிலான சுவடிகள் வில்சனுடைய பெருமுயற்சியால் கிடைக்கப் பெற்றவையாகும். 1837ஆம் ஆண்டு சாங்கிய காரிகையை மொழிபெயர்த்து லண்டனில் வெளியிட்ட வில்சன் இந்துசமய அறிவுப்புலம் தொடர்பில் பல்வேறு கல்விப்புலங்களிலும் நிறுவனங்களிலும் தான் ஆற்றிய விரிவுரைகளை நூலுருவில் வெளிக்கொணர்ந்தார். இந்துக்களின் சமய மற்றும் தத்துவ அமைப்புக்கள் பற்றிய விரிவுரைகள் என்ற தலைப்பில் அமைந்த இந்நூல் 1840இல் வெளிவந்தது.

## காஷ்மீரின் இந்து வரலாறு

ராஜதரங்கினி முதலிய புராதன இந்து வரலாற்று மூலங்களையும், கர்ணபரம்பரைச் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு 1860ஆம் ஆண்டு காஷ்மீரின் இந்து வரலாறு என்ற வரலாற்று நூலை வெளியிட்டார். எண்ணாயிரம் வரையிலான சுலோகங்களையுடைய கல்ஹணரின் ராஜதரங்கினி மற்றும் ஜோனராஜ் சிறிவாச், பிரஜ்யாபட்டர், சுகர் ஆகியோரின் சமஸ்கிருதப் பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு காஷ்மீரின் வரலாற்றை இந்து வரலாறாகவே பதிவு செய்திருக்கும் வில்சன் அக்பரின் ஆக்கிரமிப்புக்கு முன் காஷ்மீர் பிராந்தியத்தின் நிலைப்பாடு தொடர்பில் மௌனம் சாதித்த முகலாய வரலாற்றாசிரியர்களைக் கடுமையாக விமர்சித்துள்ளமையும் நோக்கத்தக்கது ஆகும். இந்த நூலின் பின்னிணைப்பில் காஷ்மீரில் நாகர்களின் பாம்பு வழிபாடு, கௌரவர்களின் வம்சவரலாறு, ஜராசந்தனுக்கும் கிருஷ்ணனுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தம், யுதிஷ்டிரர் வாழ்ந்த காலம், காந்தார அரச வம்சம், காந்தாரி பற்றிய குறிப்புக்கள் என மகாபாரதக் கதைச்சம்பவங்களைத் தகுந்த வரலாற்றுக் கோவைகளாக்கி விவரித்துச் செல்லும் பாங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

1819ஆம் ஆண்டில் வில்சனால் வெளியிடப்பட்ட வடமொழி ஆங்கில அகராதி பிற்காலத்தில் ருடால்ப் ரோத் மற்றும் வொன் போட்லிங் போன்றோரால் வெளியிடப்பட்ட அகராதியைக் காட்டிலும் சுருக்கமானதாயினும் பிற்கால வடமொழி - ஆங்கில அகராதிகளுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்தது என்ற வகையில் வில்சனின் அகராதிப்பணியும் காத்திரமானதே ஆகும். ருடால்ப் ரோத், வொன் போட்லிங் ஆகியோர் தமது மகத்தான வடமொழி - ஆங்கில அகராதியின் முன்னுரையில் வில்சனுக்கு நன்றி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

வில்சனுடைய மற்றுமொரு பயன்மிக்க நூல் 'இந்துக்களின் சமயப்பிரிவுகள்' என்ற புகழ்மிக்க பனுவலாகும். இந்துக்களிடையே நிலவும் உட்சமயப்பிரிவுகள் மற்றும் அவற்றின் வடிவங்களை மிக விரிவாக அலசுகின்ற இப்பனுவல் இந்துசமயம் பற்றி ஆய்வு செய்ய முற்படுவோருக்கான தரவுச் சுரங்கமாக விளங்குகின்றது.

இதனுடைய முதலாம் பகுதியில் பிரம்ம சம்பிரதாயம் எனப்படும் மத்துவாசாரிய வேதாந்தம் முதற்கொண்டு வங்காள வைணவம் ஈறாக இருபத்துமூன்று பிரிவுகள் பேசப்பட்டுள்ளன. நாகவழிபாடுடையவர்கள், வல்லபிகள், கபீர்பந்தர்கள் முதலிய பிரிவினரையும் இப்பகுதியில் வில்சன் பதிவு செய்துள்ளார். இரண்டாம் பகுதியில் அகோரிகள் முதற்கொண்டு யோகிகள் ஈறாக முப்பத்தெட்டு வழிபாட்டுப் பிரிவுகள் வில்சனால் ஆராயப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்காக ரஷ்யத் தூதுவரை சந்திக்கத் திட்டம்

## அரசாங்கத்திலிருந்து வெளியேறிய கட்சித் தலைவர்கள் நடவடிக்கை

**கொழும்பு, ஜூன் 16**

**இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகள் குறித்து பேச்சு நடத்துவதற்காக இலங்கைக்கான ரஷ்யத் தூதுவரை சந்திக்கத் தீர்மானித்துள்ளதாக அரசிலிருந்து வெளியேறிய கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.**

ரஷ்ய தூதுவருடனான பேச்சின்போது, நாட்டின் எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யாவிடம் உதவி பெறுவது குறித்து கவனம் செலுத்தப்படும் என்று விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

புதிய தொலைநோக்கு மற்றும் மூலோபாயத்துடன் புதிய அரசியல் கூட்டமைப்பை உருவாக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வரிசையில் நிற்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசியல் கூட்டமைப்பு அறிமுகப்படுத்தும்.

நாட்டில் எரிபொருள் கிடைக்காத காரணத்தினால் நெருக்கடி நிலை மோசமடைந்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார். (ம)


# யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பாடக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 16

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் பிரதான பாடங்களில் ஒன்றாக மாணவர்கள் தெரிவுசெய்யக்கூடிய ஆங்கிலப் பாடம் தொடர்பாக வட மாகாணத்திலே கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கருத்தரங்கு, நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் ந.ப. 12 மணி வரை யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

2022, 2023, 2024 ஆகிய வருடங்களிலே இடம்பெறவிருக்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளில் ஆங்கிலப் பாடத்துக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள், தற்போது தரம் 10, தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர்கள், உயர்தரத்தில் ஆங்கிலப் பாடத்தை தமது பிரதான பாடங்களில் ஒன்றாகத் தெரிவுசெய்ய விரும்பும் மாணவர்கள், ஆங்கிலம் தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள், உயர்தர வகுப்பு ஆங்கிலப் பாடத்திலே ஆர்வமாக இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்கமுடியும்.

கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய ஆசிரியர்கள், தற்போது ஆங்கிலத்தை உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள் ஆகியோர் வளவாளர்களாக செயற்படுவர். கருத்தரங்கில் ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14)



# விவசாயத்துக்கு எரிபொருள் தாருங்கள் அச்சுவேலியில் கையெழுத்து சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

விவசாயத்துக்கான எரிபொருள் தேவையை வலியுறுத்தி அச்சுவேலிப் பிரதேச கமக்காரர்களால் நேற்றுக்காலை கையெழுத்து சேகரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு யாழ்.மாவட்டச் செயலர், விவசாயத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரிடம் கையளிக்கப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

குறித்த கையெழுத்து சேகரிப்பில் வலி.கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷும் கலந்துகொண்டார். (ஒ-14-20)

# உதவிக் கொடுப்பனவு பெறும் திகதி நீடிப்பு

சாவகச்சேரி, ஜூன் 16

தென்மராட்சிப் பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

உதவிக் கொடுப்பனவுகள் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் நேற்று 15 ஆம் திகதி வரை வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் போக்குவரத்து மற்றும் அரச விடுமுறை போன்றவற்றைக் கருத்திற்கொண்டு கொடுப்பனவுத் திகதி எதிர்வரும் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே கொடுப்பனவுகளை அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினர் அறிவித்துள்ளனர். (ஒ-14-9)

# குழுக்களுக்கிடையே மோதல்; 13 நபர்கள் மருத்துவமனையில்

கிளிநொச்சி, ஜூன் 16

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் 13 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராமநாதபுரம் சந்தியில் மணல் கொடுக்கல், வாங்கல் தொடர்பாக இருகுழுக்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. வாய்த்தர்க்கம் முற்றி இரு குழுவினரும் தடிகள், பொல்லுகளால் மோதலில் ஈடுபட்டனர்.

இதன்போது காயமடைந்த 13 நபர்கள் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவித்த கிளிநொச்சி பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-113)

# வற்றாப்பளையில் திருடியவர் உமையாள்புரத்தில் மாட்டினார்

கிளிநொச்சி, ஜூன் 16

முல்லைத்தீவு - வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நகைகள் திருடியவர், கிளிநொச்சி - உமையாள்புரத்தில் நேற்றுமுன்தினம் கோயில் உண்டியல் உடைக்கும்போது பிடிபட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்ற வேளையில், திருவிழா நாள்களில் ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களின் சங்கிலி, மோதிரம் உள்ளிட்ட நகைகள் திருடப்பட்டன. அத்துடன் புதுக்குடியிருப்பில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டது.

குறித்த திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் காலை உமையாள்புரம் கண்ணகி அம்மன் ஆலய உண்டியலை உடைக்கும்போது பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். இதனையடுத்து சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் திருகோணமலை நிலாவெளியைச் சேர்ந்தவர் என்று தகவல் வெளியாகியுள்ளது. (ஒ-14-213)

# பௌத்த மேலாண்மையை ஒழிப்பதற்கு முற்போக்கு சக்திகள் முன்வர வேண்டும்

## அகில இலங்கை சைவமகாசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 16

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியிலும் வல்லாதிக்க பௌத்த மேலாண்மையை கைவிடாத மோசமான மனநிலை இந்தத் தீவிலிருந்து ஒழிக்கப்பட முற்போக்கு சக்திகள் முன்வரவேண்டுமென அகில இலங்கை சைவமகாசபை கோரிக்கை விடுத்துள்ளது.

அகில இலங்கை சைவமகாசபை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

திருகோணமலை மண்ணில் அரங்கேற்றப்பட்ட விடயங்கள் இன்று முல்லைத்தீவு மண்ணில் தொடர்கின்றன. இதற்கு ஆதாரம் குருந்தூர் மலையில் அண்மையில் நிகழ்ந்தேறிய விடயங்கள்தான் தொன்று தொட்டு இன்று வரை தமிழர்கள் மட்டும் வாழ்ந்து சிவ வழிபாட்டை நடத்திவரக்கூடிய அந்த மலையின் வரலாற்றைத் திரிபுபடுத்த முனைவது மிகவும் மோசமான அறமற்ற செயற்பாடாகும். சிவ வழிபாட்டு பூமி என்பதை இங்கு அண்மைய ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட பண்டைய தமிழ் மன்னர்களின் சான்று பகிர்கின்றது. இருப்பினும் இந்தச் சான்றுகள் கண்டெடுக்கப்பட்ட போது எழுந்த உணர்வு அலைகள் சிறிது சிறிதாக மழுங்கடிக்கப்பட்டன. தற்போது சைவத் தமிழர், சிங்கள பௌத்தர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என முழுத்தீவின் இன மதக் குழுமங்களும் பொருளாதார நெருக்கடியால் அன்றாட வாழ்வில் அவலங்களைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் வேக வேகமாக நீதிமன்ற உத்தரவையும் மீறி பழைய பாணியில் புதிதாக தூபியை நிறுவி புத்தரை நிலைநிறுத்த முயலும் செயற்பாடுகள் பகிரங்கமாக முன்னெடுக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பொதுவாக புத்தர் போதித்த உண்மையான தர்மத்தை பின்பற்றுவோர் இவ்வாறான செயல்களைச் செய்ய மாட்டார்கள். அதுவும் கர்மா காரணமாகவே நாட்டில் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது.

பழைய மோசமான தவறுகளுக்குப் பகிரங்கமாக பல இளையோர், கலைஞர்கள் தங்கள் ஆதங்கங்களை பொது வெளியில் பகிரங்கப்படுத்தியுள்ள இந்த வேளையில் புரையோடிப் போய் இருக்கும் ஆறாத வடுக்களை மீளக் கிளற உண்மையான சிங்கள பௌத்தர்கள் அனுமதிக்கக்கூடாது என்பதே, மனிதாபிமான சிந்தனைகளும் ஏழைகளின் பசிப்பிணி, உடற்பிணி தீர்க்கும் பணிகளிலுமே முன்னுரிமையைப் பெறவேண்டுமென விரும்பும் மனிதத்தை நேசிக்கும் சைவத்தமிழர்களின் பெருவிருப்பாகும் என்பதை சுட்டிகாட்டி நிற்கின்றோம் -என்றுள்ளது. (ஒ-14-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி கோத்தாபய உடன் விலகவேண்டும்

## சிவில் சமூக அமைப்பு போர்க்கொடி

**கொழும்பு, ஜூன் 16**

**மருத்துவர்கள், சட்டத்தரணிகளை உள்ளடக்கிய 'டிரக்சன் ஸ்ரீலங்கா' என்ற சிவில் சமூக அமைப்பு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகவேண்டுமென மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

மருத்துவர்கள், சட்டத்தரணிகளை உள்ளடக்கிய அந்த சிவில் சமூக அமைப்பு மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் அரசியல் பொருளாதார சமூக நெருக்கடிக்கு தீர்வைக் காணும் விடயத்தில் இன்றுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. நாளாந்தம் நிலைமை மோசமடைவது தேசத்தினதும் மக்களினதும் உயிர்வாழ்தலுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. தற்போது பின்பற்றப்படும் அரைகுறை அல்லது இடைக்கால நடவடிக்கைகள் எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணப்போவதில்லை. ஜனாதிபதியும் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இந்த விவகாரத்தைக் கையாளும் விதத்தை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம். பண மற்றும் தனிப்பட்ட ஆதாயங்களை அடைவதற்கு முயற்சி செய்யும் அனைத்துக் கட்சிகளும் மக்களின் அபிலாஷைகளை - விருப்பங்களை மறந்துவிட்டன போல தோன்றுகின்றது. பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலகவேண்டும். இதுவே பொது மக்களின் முதன்மையான வேண்டுகோள். இந்த நெருக்கடி ஏற்படுவதற்கு தானும் காரணம் என்பதை ஜனாதிபதி வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளதால் அவர் உடனடியாகப் பதவி விலகவேண்டும் - என்றுள்ளது. (ம)




## கோண்டாவிலில் திருடப்பட்ட கட்டடப் பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் கடந்த வாரம் திருடப்பட்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று மீட்கப்பட்டன.

கோண்டாவில் பகுதியிலுள்ள வீட்டில் வேலை இடம்பெற்றபோது வேலை ஒப்பந்தகாரரால் நிலமாபிள்கள், கழிவறைக்குப் பயன்படுத்தும் மாபிள்கள், மின் மோட்டர், மின்வயர்கள் உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளடங்கலாக சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வேலைக்காக வைக்கப்பட்டன. இந்த நிலையிலேயே குறித்த பொருள்கள் கடந்த வாரம் திருடப்பட்டன.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதற்கமைய கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து திருடப்பட்ட பொருள்களை கோண்டாவில், உரும்பிராய் பகுதிகளில் மீட்டனர். அத்துடன் திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்களையும் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14-26)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு மேலதிக கொடுப்பனவுகள்

சாவகச்சேரி, ஜூன் 16

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு அரசால் அறிவிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி வங்கிகளில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றன.

அலுவலக நாள்களில் காலை 8.45 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இதற்கமைய மக்கள் தமது கிராம பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு திகதியை உறுதிப்படுத்திக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொடுப்பனவு பெற ஒரே நேரத்தில் வராமல் பகுதி பகுதியாக வந்து பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-14-9)

## மரண அறிவித்தல்

மலர்வு 01 . 03 . 1981



உதிர்வு 15 . 06 . 2022

### அமரர் சின்னத்துரை உதயணன்

உழுத்தம்புலம் மாவடி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் இடைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை உதயணன் 15.06.2022 அன்று மாலைப்பொழுதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த அமரர் சின்னத்துரை கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் இடைக்காட்டைச் சேர்ந்த அமரர் முருகுப்பிள்ளை சிவராணி தம்பதியரின் அன்பு மருமகனும் சுபாசினியின் (ஆசிரியை, யா/இடைக்காடு ம.வி) ஆருயிர் கணவனும் அபூர்வனின் அன்புத் தந்தையும் முகுந்தன் (U.K) அமரர் அரவிந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுரேக்கா, நந்தினி ஆகியோரின் மைத்துனரும் கிருபாகரனின் சகலனும் கேசிகன், பிரகதி, பிரியன், நேஸ்வியா ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இடைக்காட்டில் இன்று (16.06.2022) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியவில் நடைபெற்று இடைக்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 05 1940



மறைவு 14 06 2022

### திருமதி புஷ்பவதி பத்மநாதன் (பபா)

(ஓய்வுபெற்ற ஆசிரியை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், யாழ். St.John Bosco's Vidyalayam)

யாழ். வல்வெட்டியை பிறப்பிடமாகவும், இல.06, 3/5, IBC Road, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புஷ்பவதி பத்மநாதன் (பபா) அவர்கள் 14.06.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற வைத்தியநாதன், நைமிசாரணியநாயகி (நல்லபிள்ளை) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கனகம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும், மயில்வாகனம் பத்மநாதன் (Sun Power Systems, Paranthan Chemicals) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், நவமணி (மணி) ராஜநாயகம், பஞ்சலிங்கம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், கேதீசன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிபி மத்தியூஸின் அன்பு மாமியாரும், அவிராவின் பாசமிகு பாட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொரளை A.F.Raymonds இல் 15.06.2022 புதன்கிழமை மதியம் முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 16.06.2022 இன்று வியாழக்கிழமை தகனக்கிரியைகள் மாலை 4.30 மணியளவில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மகன்மார் - கேதீசன், செந்தூரன்
070 2737141, + 971 558995703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாலைச் சந்தி வட்டுக்கோட்டை சந்தி

# கைவிட்ட வீதிப்புனரமைப்பு விரைவில் மீள ஆரம்பியுங்கள்

## மாவட்டச் செயலருக்கு கோரிக்கை

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பொன்னாலை - பருத்தித்துறை (ஏபி-21) பிரதான வீதியில் பொன்னாலை சந்தி - வட்டுக்கோட்டை சந்தி வரையான வீதியை உடனடியாக மீள புனரமைத்துத் தருமாறு யாழ்.மாவட்டச்செயலருக்கு காரைநகர் பிரதேசசபைத் தவிசாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தவிசாளரால் யாழ்.மாவட்டச் செயலருக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:- காரைநகர் பிரதேச மக்கள் அனைவரும் பெரும்பாலும் பொன்னாலை-பருத்தித்துறை வீதியூடாகவே போக்குவரத்து செய்கின்றனர். குறித்த வீதியானது மீள் புரைமைப்புப் பணி இடம்பெற்று ஒரு சில சிறிய பாலங்கள் மீள அமைக்கப்பட்டன. முழுமையாக சீரமைப்பின்றி காணப்பட்ட இந்த வீதி தற்போது கற்கள், கம்பிகள், குழிகள் என்பவற்றுடன் மிக ஆபத்தாகக் காணப்படுகின்றது. குறித்த வீதியில் போக்குவரத்து முற்றாக செய்ய முடியாத நிலையில் சகல திணைக்கள அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். வீதியில் உரிய காலத்தில் புனரமைப்பு இடம்பெறும் என்று மக்கள் எதிர்பார்த்த நிலையில் அது தடைப்பட்டுள்ளது. எனவே குறித்த வீதிக்கு மக்கள் சிரமமின்றி செல்லக்கூடிய வகையில் உடனடியாக மீள்புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யுமாறும் தாங்கள் முன்னெடுக்கும் செயற்பாட்டை எமது சபைக்கும் தெரியப்படுத்துமாறும் தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன் -என்றுள்ளது. (ஒ-14-50)

# குளிரூட்டி பழுதடைந்தமையால் சடலங்களைப் பேண முடியாத நிலை

சாவகச்சேரி, ஜூன் 16

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை உடற்கூற்றுப் பரிசோதனை அறையிலுள்ள குளிரூட்டிகள் பழுதடைந்துள்ளதால் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படும் சடலங்கள் குளிரூட்டியில் வைத்துப் பாதுகாக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் சடலங்களை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு, விலையுயர்வால் யாழிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்துக்கு சடலங்களைக் கொண்டு வருவதற்கு அதிகரித்த வாகனக் கட்டணம் அறவிடப்படுகின்றது. ஏற்கனவே பொருளாதார சிக்கலில் இறப்புச்சடங்கு நடத்த முடியாமல் தடுமாறும் குடும்பங்கள், இவ்வாறான மேலதிகச் செலவை ஏற்றுக்கொள்ள முடியாமலுள்ளது என்று கவலை தெரிவித்துள்ளனர். (ஒ-14-9)


**பிறிண்டிங் மெசின் விற்பனைக்கு**

கம்பனி உத்தரவாதமுள்ள சிறிது காலம் பாவித்த Duplo B5 மெசின் விற்பனைக்கு (CR 36213)(3/6)

**075 025 2141**


# சிறப்புத்தேவையுடையோர் விவரங்கள் திரட்டல்

வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சிப் பிரிவுகளில் வசிக்கும் சிறப்புத்தேவையுடையோர் விவரங்கள் வட்டார ரீதியாக திரட்டப்படுகின்றன. வடமாகாண ஆளுநரின் பணிப்பின்கீழ், வட்டார அபிவிருத்தி அலுவலர்கள், சமூக சேவைகள் அலகுகளின் அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் இணைந்து விவரங்களைத் திரட்டி உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கி வருகின்றனர். பிரதேச சமூக சேவைகள் அலகு உத்தியோகத்தர்கள், சிறப்புத்தேவையுடையோர் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பதிவுகளைத் திரட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-9)


**தேவை**

கொழும்பில் உள்ள வீடொன்றில் குழந்தைகளை பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். (CR 36210)(3/6)

தொடர்புகளுக்கு : 076 104 3037

**தேவை**

பிளாட் போடக்கூடிய முறுக்கு கம்பி 10mm, 12mm தேவை (CS 45214)(3/6)

தொடர்பு : 077 476 2922

**வேலை வாய்ப்பு**

அலுவலக உதவியாளர் (3) CCTV திருத்துனர் வங்கி உதவியாளர் (2) போன்ற வேலைகள் உள்ளன. (CS 45213)(3/6)

077 408 8241, 076 674 3807

**மணப்பெண் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுடைய விவாகரத்துப் பெற்ற டென்மார்க் பிரஜாவுரிமையுடைய 7ல் செவ்வாய் உடையவருக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு:- 077 4366704, 075 164 0104


## வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் அச்சுவேலி (வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.விண்ணப்ப படிவங்களை சங்க வேலை நாட்களில் தலைமைகாரியாலயத்தில் ரூ.20 ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர். வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அச்சுவேலி. பருத்தித்துறை வீதி. ஆவரங்கால். புத்தூர் என்ற முகவரிக்கு 30.06.2022ந் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

**பதவிப்பெயர்:- விற்பனை உதவியாளர்**

| பதவி விபரம் | சம்பள குறியீட்டு இல. | வெற்றிடம் |
|---|---|---|
| 01.விற்பனை உதவியாளர் | 308/17 | 16 |

**பதவி குறியீட்டு இலக்கம்:- 308/15(கூ.வே.ஆணைக்குழு சு.நி.இல.108/81இன் படி)**
**சம்பள குறியீட்டு இலக்கம்:-308/17(கூ.வே.ஆணைக்குழு சு.நி.இல.04/2018இன் படி)**
**சம்பள அளவுத்திட்டம்:- 14725-17175(சுற்று நிருப இல.04/2018 இன் படி)**
**115x10-130x10**

(இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் இதரபடிகளும் வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(1) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்

அல்லது

(2)08ந் தர கல்விச்சான்றிதழ்

**பொதுநிபந்தனைகள்**

1.வயது 30.06.2022 ந் திகதி 18 வயதிற்கு குறையாதவர்களாயும் 45 வயதிற்கு மேற்பட்டாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2.கல்வித்தகைமைகள். வயது. வதிவிடத்தை உறுதிப்படுத்துதல் நற்சான்றிதழ். தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

3.நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்கப்பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

4.ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

5.சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்** **16.06.2022**

# UNIVERSITY OF JAFFNA

## Global NIHR - AF Project, Faculty of Medicine, University of Jaffna.

## Post of Data Collector, Phlebotomist, Laboratory Assistant and Data Collecting Assistant

University of Jaffna, Sri Lanka has embarked on a medical research programme on Global Health Research on Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK Funded by National Institute of Health Research (NIHR), UK.

**01. Data Collector**
**Vacant – 03 posts**
**Requirements:**

- A Bachelor degree from UGC approved University or Higher Education Institution.
- Preference will be given to those who have experience in health research related and e-based data collections.

Remuneration: A monthly salary of LKR 40,000.00 will be paid.

**02. Phlebotomist**
**Vacant – 02 posts**
**Requirements:**

- Relevant educational qualification for the post.

or

Experience in blood withdrawal especially using vacutainer technique, labelling of bio samples, waste disposal using standard professional competencies and experience in both health & research filed.

- Preference will be given to those who have experience in both health & research fields.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**03. Laboratory Assistant**
**Vacant – 02 posts**
**Requirements:**

- Relevant educational qualification for the post.

or

Minimum of 10 years post qualifying experience in maintaining good laboratory practice, centrifuging, preparation, pipetting, labelling and storing of bio samples using standard professional competencies.

- Preference will be given to those who have experience in both health & research fields.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**04. Data Collecting Assistant**
**Vacant – 07 posts**
**Requirements:**

- Should have passed the G.C. E. A/L examination with three passes.
- Preference will be given to those who have experience in health research related and e-based data collections.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 will be paid.

General notes to all the above posts: Please refer the University of Jaffna website- www.jfn.ac.lk


Applicants are requested to send their applications duly filled in the prescribed application form downloaded from the University website along with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the Country Lead, Global NIHR – AF Project, Department of Community & Family Medicine, Faculty of Medicine, University of Jaffna. Applicants are expected to submit their application forms with the scanned copies of all the relevant documents (mentioned above) through the E-mail (afsl@univ.jfn.ac.lk) on or before 29.06.2022.

For further details, please refer the University of Jaffna website - www.jfn.ac.lk

**15.06.2022** (CR 36214) (3/6) **Registrar**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திரு.பொன்னம்பலம் சிவரூபன் (ரூபன்)

யாழ்.பிடாரி கோவிலடி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா, தோனிக் கல்லை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.பொன்னம்பலம் சிவரூபன் (ரூபன்) அவர்கள் நேற்று (15.06.2022) புதன்கிழமை இறைவனடி எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் இரத்தினேஸ்வரி தம்பதியரின அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சுதாயினி (சுதா) அவர்களின் அன்புக் கணவரும், ஜனா, ராக்கி, சுலக்ஸன், றோசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வனசா, ரஞ்சன், சிவன், கிருபா, கிருசா, கரன் ஆகியோரின் சகோதரனும், கிருஸ்ணா, விதுஷா ஆகியோரின் மாமனாரும், சிவகுமார், கண்ணா ஆகியோரின் மைத்துனரும், சியா, துவான், டினோ, வினுசன், அணு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2022) ந.ப. 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 46871)1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 01 . 1935

இறப்பு 14 . 06 . 2022



### திருமதி தங்கநேசம் துரைரட்ணம்

யாழ். சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு 15 கிரான்பாஸ், சங்கத்தானை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கநேசம் துரைரட்ணம் அவர்கள் நேற்று முன்தினம் (14-06-2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சங்கத்தானையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைரட்ணம் (Retired Senior Income Tax Officer) அவர்களின் அன்பு மனைவியும், நேரு (Retired Walmart Canada), வாசுகி (Retired Teacher Colombo, Canada), வினோபா (Senior Director- BOI Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகலிங்கம் (Retired Lecturer District Director of Agriculture DOA Srilanka- Amazon Canada), சந்திரபிரபா (Teacher, Ramanathan Hindu Ladies College Bampalapity, Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தங்கமணி, Dr. சிவானந்தம், சௌந்தரம் மற்றும் முத்துலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற கனகரட்ணம் (Court Interpreter), நேசமணி (கனடா), காலஞ்சென்றவர்களான கந்தசாமி (Court Interpreter), தவேந்திரன் (Engineer) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜனனி (Purchasing Coordinator Canada)- பிரபாகரன் (Plant Manager Canada), நிரோஷ்கண்ணா (Finance Manager Canada)- றஜுஜா (Pharmacist Canada), ரமேஷ்கண்ணா (Software Engineer Canada, USA)- அபிவர்ஷனி (Accountant Canada), சந்தோஷ்கண்ணா (System Consultant Canada)- மகிஷா (Youth Counsellor Canada), பிரசோதயா (Colombo Ladies collage), சுபோதயா (Colombo Ladies collage) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திபிஷா (கனடா), ஹரிஷ்ராம் (கனடா), தக்ஷ்வி (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளிற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| நேரு | - மகன் | Mobile | : | +14163890748 |
| வாசுகி | - மகள் | Mobile | : | +16475712694 |
| வினோபா | - மகன் | Mobile | : | +94714414895 |
| ஜனனி | - பேத்தி | Mobile | : | +14162091210 |
| நிரோஷ் | - பேரன் | Mobile | : | +16477722374 |
| ரமேஷ் | - பேரன் | Mobile | : | +14166847983 |
| சந்தோஷ் | - பேரன் | Mobile | : | +16475492033 |

தகவல் :
குடும்பத்தினர்
வீட்டு முகவரி:
இல. 378, A9 வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.

(CR 36211) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 06 . 1949

மறைவு 14 . 06 . 2022



### தியாகராஜன் மகேஸ்வரி

பருத்திகலட்டி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் புளியந்தோட்டம் ஐயனார் கோவிலடி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜன் மகேஸ்வரி கடந்த (14.06.2022) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகர் சின்னக்குட்டி தம்பதிகளின் மருமகளும், திரு.கனகர் தியாகராஜனின் அன்பு மனைவியும், அமரர் மயில்வாகனம், திரு. சிவகுமார் (நவசி), புவனேஸ்வரி (பாப்பா), கோபாலகிருஸ்ணன் (கோபால்) நடராசா, விக்னேஸ்வரன், இராசமணி, ஸ்ரீபவன் ஆகியோரின் சகோதரியும் அமரர் இராசையா, மற்றும் நாகேந்திரம், திரு.சின்னத்துரை, வீரசிங்கம், நன்னித்தம்பி, தவமணி, இராசம்மணி, நடராசா ஆகியோரின் மைத்துனியும் கைலைநாதன் (சுவிஸ்), ஜெயசுதா (சுவிஸ்), சுதாயினி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத்தாயாரும் திரு.உதயதாஸ், விஜிதா, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌசிகன், வாகீசன், மதுராளன், திசாளன், விதுசா, உதுசா, சிந்துசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2022) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியந்தோட்டம்,
மல்லாகம்

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 09 . 1961

மறைவு 14 . 06 . 2022



### திரு. சற்குணலிங்கம் இந்திரகுமார்

(பணியாளர் - இராசா டீசல் இன்ஜினியர்ஸ்)

நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட சற்குணலிங்கம் இந்திரகுமார் (டீசல் குமார்) அவர்கள் கடந்த (14.06.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சற்குணலிங்கம் பரமேஸ்வரியின் புதல்வனும் காலஞ்சென்ற விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும் நிர்மலாதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான தவமலர், கணேஸ்வரன் மற்றும் புவனேஸ்வரன் (யாழ்.மத்திய கல்லூரி - O.E.S), சோதிநாயகி (சுவிஸ்), லிங்கேஸ்வரி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரகலா, சித்திரா, பாஸ்கரன் (சுவிஸ்), ரட்ணராஜா (இலண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஜெயநந்தனவின் சித்தப்பாவும், விதுசனின் பெரியப்பாவும் அமுதா, சயந்தினி, பாருசான், யுகபிரியன், விஷ்வயித், ரமா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2022) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 9074205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கு தவிசாளருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

நிலாவரையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட முயற்சிகளைத் தடுத்ததன் ஊடாக தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமங்களுக்கு தடை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த வருடம் தொடரப்பட்ட இந்த வழக்கை முன்கொண்டு செல்வதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை மல்லாகம் நீதிவான் திருமதி காயத்திரி சைலவன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அச்சுவேலி பொலிஸார் மேலதிக அறிக்கையை சமர்ப்பித்ததுடன் சட்டமா அதிபரின் ஆலோனைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மன்றில் தெரியப்படுத்தினர். அதைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-26)

# சங்காபிஷேகம்

கொடிகாமம், ஜூன் 16

கைதடி வீரகத்தி பிள்ளையார் முதலாய கோயில்கள் மணவாளக் கோல சங்காபிஷேக பெருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வீரகத்தி பிள்ளையாருக்கு 1008 சங்காபிஷேகமும் ஏனைய மும்மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-159)

## இலங்கைக்கு...

இந்தத் தகவலை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்காகவும் மக்களுக்கு ஆதரவாகவும் கடந்த 70 வருடங்களாக அமெரிக்கா வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் வர்த்தக வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

தற்போதைய அறிவிப்பு தனியார் துறையினருக்கு சிறந்த செய்தி. இந்த 120 மில்லியன் அமெரிக்க டொலர் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களைச் சென்றடையும் என்று தெரிவித்தார்.

அதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தூதுவர் மற்றும் சீனத் தூதுவர் ஆகியோருக்கு இடையே சந்திப்பொன்று நடந்திருந்தது. சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இலங்கை பிரச்சினைக்குத் தீர்வுகாண அமெரிக்கா உதவும் என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## அரசாங்க...

விவசாயம், உணவுப் பாதுகாப்பு, பொதுமக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக்க புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல், மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் அனைத்து அரச சேவைகளையும் பரவலாக்கல் மற்றும் அரச செலவினத்தை முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் நேற்று முற்பகல் கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆள்களைப் பதிவு செய்தல், குடிவரவு, குடியகல்வு மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் உள்ளிட்ட பிற அரச நிறுவனங்களையும் மேலும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பரவலாக்குவதன் மூலம் அந்தச் சேவைகளை மிகவும் திறமையாக வழங்க முடியும் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி இவ்வாறான முக்கியமான நிறுவனங்களை ஒன்றோடொன்று இணைப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் பல நாடுகள் உணவுப் பாதுகாப்பில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. இந்த நாட்டின் அறுவடை விநியோகத்தின்போது, சுமார் 40 சதவீதம் அழிக்கப்படுகிறது. இது தொடர்பில் கடுமையான அவதானம் செலுத்துவதன் மூலம் உணவுப் பொருள்களைப் பாதுகாக்க முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

அறுவடையை விநியோகிப்பதில் இடைத்தரகர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் விவசாயிக்கும் நுகர்வோருக்கும் நியாயமான விலையை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசுக்குச் சொந்தமான, பயிரிடப்படாத நிலங்களைக் கண்டறிந்து, பயிர்ச்செய்கையில் ஆர்வமுள்ள இளைஞர்களிடம் விரைவில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முப்படைகள், சிவில் பாதுகாப்புப் படை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களமும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராகவுள்ளன. அந்த நிறுவனங்களையும் விவசாயத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் வெற்றிகரமான பிரதிபலன்களை அடைய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-எ-இ)

## எரிபொருள்...

மன்னார் வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முன்பாக நேற்றுக் காலை 6 மணி முதல் பெற்றோலைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தபோதும், பி.ப. 3 மணி வரை பெற்றோல் விநியோகிக்கப்படவில்லை.

அதனால் பொறுமையிழந்த பொதுமக்கள் ஏ-9 வீதி மற்றும் மன்னார் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த இடத்துக்குச் சென்று பொலிஸார் நிலைமைகளைக் கட்டுப்படுத்த முயன்றபோது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

அதன்பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் கையிருப்பு இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (எ-110)

## வடக்கில்...

இடியுடன் கூடிய மிதமான மழை அவ்வப்போது கிடைக்க வாய்ப்புள்ளதால், பொதுமக்கள் அது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுவது அவசியம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## அரசியல்...

வகையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. தற்போது ஆடப்படுகின்ற அரசியல் சூதாட்டத்தின் காரணமாகவே 21ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு ஆபத்து நிகழ்ந்திருக்கின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மறுசீரமைப்புக்கான தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் குழுவினருடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நீதி அமைச்சரின் 21 ஆவது திருத்தம், அரசின் 21ஆவது திருத்தம், எதிர்க்கட்சியின் 21 ஆவது திருத்தம் என எதுவும் இல்லை. ரஞ்சித் மத்தும பண்டாரவால் தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவரப்பட்ட 21ஆவது திருத்தம் மாத்திரமே தற்போதுள்ள ஒரே ஒரு திருத்தமாகும். உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படவுள்ளது. நாடாளுமன்றத்தின் மூன்றாவது வாரத்தில் அது தொடர்பான விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படலாம். ஆயினும், இந்த நாடு சீர்திருத்தங்களை விட அரசியல் விளையாட்டுக்களில் மூழ்கியிருப்பதால் இது பற்றி விவாதிக்கப்படாத இரண்டாம் பட்ச கவனிப்பே இருக்கின்றது.

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கான தீர்வு மக்களின் புதிய ஆணையிலேயே தங்கியுள்ளது. இந்த நெருக்கடிக்கு சில மாதங்களில் தீர்வு கிடைக்கும் எனச் சில வீரர்கள் பெருமை பேசினாலும்கூட, உண்மையான நிலைப்பாடு அவ்வாறு இல்லை. புதிய சீர்திருத்தச் செயற்பாடுகளுக்கு சகல தரப்புக்களினதும் யோசனைகள் இன்றியமையாதவை - என்றார். (எ-0)

## இறக்குமதி...

கடந்த மே மாதம் 6ஆம் திகதி முதல் அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியில் இதுவரை பயன்படுத்தப்பட்ட திறந்த கணக்கு அடிப்படையிலான முறையை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் அத்தியாவசியப் பொருள் இறக்குமதிக்கான டொலரைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்தது.

செத்தல் மிளகாய், கடலை மற்றும் நெத்தலி போன்ற பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

## சிலிண்டர்...

முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலையை 210 ரூபாவுக்கு மேற்படாது அதிகரிக்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும், உலகச் சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதை அடுத்தே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் இன்று சந்தைக்கு விநியோகிக்கப்படாது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. அதனால் மக்கள் வரிசைகளில் நிற்பதைத் தவிர்க்க வேண்டும் என்று லிட்ரோ நிறுவனத்தின் பேச்சாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் எரிவாயு சிலிண்டர் நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், தற்போது கப்பலில் இருந்து இறக்கப்பட்டுள்ள 3 ஆயிரத்து 900 மெற்றிக் தொன் எரிவாயுவைக் கொண்டுவந்த கப்பலுக்கு மேலதிகமாக எந்தவொரு எரிவாயுத் தாங்கி கப்பல்களுக்கும் முன்பதிவு செய்யப்படவில்லை என்று தெரிவித்தார்.

தற்போது வந்துள்ள சிறிய அளவிலான எரிவாயு மூலம் நாட்டின் எரிவாயுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## பெண்...

றும் பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு, ஆண் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தொலைபேசி ஊடாக அச்சுறுத்தினார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் இரு வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவரும் நிலையில், நிர்வாக மட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், மருத்துவமனை அத்தியட்சகருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பெண் தாதிய உத்தியோகத்தர் கடந்த புதன்கிழமை நள்ளிரவு கடமையில் இருந்தபோது, அவருக்குத் தொலைபேசி ஊடாகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸார் மேற்கொண்ட புலன்விசாரணையில் அச்சுறுத்தலை விடுத்தவர் அதே மருத்துவமனையில் கடமையாற்றும் ஆண் தாதிய உத்தியோகத்தர் ஒருவரே என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுத்து அறிக்கையளிக்க வேண்டும் என்று சாவகச்சேரி மருத்துவமனை அத்தியட்சகருக்கு பணிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரும் தனியான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-எ-26)

## 64 பேர்...

சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்துக்கு இடமான படகு ஒன்றைச் சோதனையிட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதேவேளை, சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பும் முகவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர், பாதுகாப்புத் தரப்பினருக்கு தகவல் வழங்குகின்றனர் என்று கூறப்படுகின்றது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்தோட்டச் செய்கையில்

# 3,000 சிறைக்கைதிகளை ஈடுபடுத்துவதற்குத் திட்டம்

**கொழும்பு, ஜூன் 16**

**தற்போதைய உணவு நெருக்கடியை எதிர்கொள்ள வீட்டுத்தோட்டச் செய்கை நடவடிக்கையில் இராணுவம், சிவில் பாதுகாப்பு பிரிவு மற்றும் சுமார் 3000 சிறைக்கைதிகளை ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

விலங்கின நலம்பேணல் சட்டவரைவு தொடர்பில் கமத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டம் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்,

தற்போதைய உணவு நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் மக்களை வீட்டுத்தோட்டம் செய்வதற்கு ஊக்குவிப்பதன் முக்கியத்துவம் மற்றும் அனைத்து அரசாங்க அலுவலகங்களிலும் நிலத்தை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்துதல் என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையை மேலும் வெற்றிகரமாக்கிக்கொள்ள இராணுவம், சிவில் பாதுகாப்புப் பிரிவு மற்றும் சுமார் 3 ஆயிரம் சிறைக்கைதிகளைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

அதன்படி பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு 'சேர்ந்து பயிரிடுவோம் நாட்டை வெல்வோம்' எனும் வேலைத்திட்டம் விரைவில் கொண்டுவர யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு உட்பட சகல பிரதேசங்களிலும் உள்ள பயன்படுத்தப்படாத வயல் காணிகள், வயல் காணிகளை நிரப்பி கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் நீர்ப்பாசனப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

மேலும் எதிர்காலத்தில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உரத்தை, நெல் மற்றும் சோளம் உற்பத்திக்கு ஜூலை மாதத்தில் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ச-இ)

## வன்புணர்வின் பின்னர் பெண் கொலை மருத்துவருக்கு உறுதியானது தூக்கு!

மருத்துவ ஆலோசனை பெறவந்த இளம் பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்தி பின்னர் கொலை செய்த வழக்கில், குற்றவாளியான மருத்துவருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தூக்குத் தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. அத்துடன், சம்பந்தப்பட்ட மருத்துவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி நீர்கொழும்பு ஆதார மருத்துவமனையின் அறுவைச் சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த மருத்துவர், இளம் பெண்ணை வன்புணர்வுக்குட்படுத்திய பின் கொலை செய்தார். 2014ஆம் ஆண்டு நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தால் வன்புணர்வு மற்றும் கொலைக் குற்றத்துக்காக மருத்துவர் தண்டிக்கப்பட்டார். இந்தத் தண்டனையை எதிர்த்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தாக்கல்செய்த மனு நீதியரசர்கள் சம்பத் அபேகோன், பி.குமாரரட்ணம் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. கொலைக்கு ஒரு நிமிடம் முன்பு குற்றஞ்சாட்டப்பட்டவரின் அறையில் பெண் இருந்தது உறுதி செய்யப்பட்டமை நீதிமன்றத்தில் தெரியவந்தது. பெண் இறக்கும்போது வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்பதற்கான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டது. இதன்படி நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்தது. (ம)

**மேற்பார்வையாளர் தேவை**

தாவடியில் இயங்கும் அரிசி ஆலையினை மேற்பார்வை செய்வதற்கு வேலையாள் தேவை.

தொடர்பு:-
077 2622 988

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்திற்கு றோல்ஸ், பற்றீஸ், சமோசா என்பன தயாரிக்க அனுபவம் வாய்ந்த சமையல் ஆள் மற்றும் உணவு பரிமாறுபவர்கள் தேவை.

தொடர்பு:- 075 714 1908

## 'எதனோல்' இறக்குமதி தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குக

### கோபா குழு பரிந்துரை

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்படும் எதனோலின் அளவு மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு முறையான கட்டுப்பாடுகள் இல்லாமை குறித்து அண்மையில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவான கோபாகுழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

பல்வேறு நிறுவனங்களால் நாட்டுக்கு எதனோல் இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறைகள், ஒவ்வொரு நிறுவனங்கள் பற்றிய தகவல்கள், நிறுவனங்களாலும் இறக்குமதி செய்யப்பட்ட எதனோல் தொகை உள்ளடங்கிய அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

அத்துடன், இலங்கைக்கு வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பிலும் குழுவால் கேள்வியெழுப்பட்டது. அதற்கான நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் இணைந்து பொறிமுறையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க கடந்த காலங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இந்தச் செயற்பாட்டை மிகவும் வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் பேணுவதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றைத் தயாரித்து நான்கு மாதங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் செயற்பாடுகளை உரிய தரத்தில் முன்னெடுத்துச் செல்ல சரியான கணினிக் கட்டமைப் பொன்று இல்லாமையால் கணினிவலையமைப்பை விரைவில் நடைமுறைப்படுத்தவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

இதன்போது வரிச்சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை 5 வருடங்கள் முடியும்வரை வேறு தரப்பினருக்கு மாற்றமுடியாது. அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டு 5 வருடங்கள் கடந்த பின்னரும், உரிய வாகனங்களின் சாதாரண வரிப் பெறுமதியை மீளப்பெறுவதற்குத் தேவையான நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது எனஅதிகாரிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

இதற்குச் சலுகை அடிப்படையின் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான உரிமங்களை முறையாகப் பின்தொடர்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலின் முக்கியத்துவத்தை குழு வலியுறுத்தியது.

அத்துடன் சீனி கிலோவொன்றுக்கு அறவிடப்படும் விசேட வரியை 50 ரூபாவிலிருந்து 25 சதமாகக் குறைத்ததன் ஊடாக எதிர்பார்த்த நன்மை நுகர்வோரைச் சென்றடையாமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது. சீனி இறக்குமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் மற்றும் சீனி இறக்குமதியைக் கட்டுப்படுத்த அவசியமான அளவுகோல்களை அறிமுகப்படுத்தாமை குறித்து இந்த மாதம் 21ஆம் திகதி குழுவால் கலந்துரையாடவுள்ளது -என்றுள்ளது. (ச-இ)

## வண்ணை காட்டுத்தறை அம்பலவாணப்பிள்ளையார் பெருந்திருவிழா



யாழ்ப்பாணம், ஜன் 16

வண்ணை காட்டுத்தறை அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில் பெருந்திருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்தத் திருவிழாவும் நடைபெற்று மாலை 7மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது.

கொடியேற்றம், தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்களின்போது பகல் 12.30 மணிக்கு மாகேஸ்வரப் பூசையும் (அன்னதானம்) இடம் பெறும்.

**பணியாளர் தேவை**

யாழ். திருநெல்வேலியில் இயங்கும் நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- கேக் தயாரிப்பாளர் முன் அனுபவம் உள்ளவர்கள் (ஆண்/ பெண்)
- உதவியாளர்கள் (பெண்)

கருடா Cafe
166, இராமநாதன் வீதி, பல்கலைக்கழகம் முன்பாக
(CS 45210)(3/6)
077 772 9978

**பெண் வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் தங்கிநின்று பராமரிப்பு வேலை செய்வதற்கு 35-50 வயதுக்குட்பட்ட பெண் வேலையாள் தேவை.
தகுதிக் கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு.
(CS 45215 a)(3/6)
0779396733, 0742167348

**வேலையாள்கள் தேவை**

வவுனியாவில் அமைந்துள்ள தனியார் பண்ணை ஒன்று-க்கு தங்கி நின்று பணியாற்றக்கூடிய ஆண் பெண் வேலையாட்கள் குடும்பமாக தங்கி நிற்போர் தேவை.

- வயது 40-55.
- தகுதிக்கேற்ப சம்பளம் மற்றும் மூன்று நேர உணவு, தங்குமிடம் வழங்கப்படும். தொடர்புக்கு

(CS 45215 b)(3/6)
0764090828, 0742565421

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.